# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்

## முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,

## மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 4 ம் நாள்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண்.937/2017**

CNR.No.TNCB17-001671-2017

1. தெய்வசிகாமணி (Died)

2. சுப்பிரமணியம் (Died)

3. ராஜாமணி

4. சண்முகசுந்தரம்

5. செந்தில்பிரகாஷ்

6. மகேஸ்வரி

7. நிகிலா

8. கௌரி

(Amended as per order in IA .No.18/2026, Dated:21.01.2026)

(Amended as per order in IA .No.8/2023, Dated:11.12.2023) ... **வாதிகள்**

//எதிர்//

1. M/s K. P. R. காட்டன் மில்ஸ், பிரைவேட். லிமிடெட்.,

2. K. P. ராமசாமி

3. K. P. தெய்வசிகாமணி

4. P. நடராஜ்

அனைத்து பிரதிவாதிகளுக்கும் அவர்களது பொது

அதிகார முகவர் கிருஷ்ணன் ... **பிரதிவாதிகள்**

இந்த வழக்கானது இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ரவீந்திரன், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சந்திரசேகரன், அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

வழக்கு 1ம் அயிட்ட சொத்துக்கு வாதிகளே முழுமையான உரிமையாளர்கள் என்று விளம்புகை பரிகாரம் கோரியும், மேலும் வழக்கு 1ம் அயிட்ட சொத்தின் உடைமையை வாதிகளிடம் ஒப்படைக்குமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிட கோரியும், பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, அதிகார முகவர்களோ, உறவினர்களோ, குடும்ப உறுப்பினர்களோ மற்றும் அவர்கள் சார்பாகச் செயல்படும் வேறு எந்த நபர்களோ வழக்கு 1ம் அயிட்ட சொத்தின் பௌதீக அமைப்பை எந்த வகையிலும் மாற்றக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கு 2ம் அயிட்ட சொத்துக்கு வாதிகளே முழுமையான உரிமையாளர்கள் என்று விளம்புகை பரிகாரம் கோரியும், பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, பணியாளர்களோ, முகவர்களோ, நியமிக்கப்பட்டவர்களோ, ஊழியர்களோ, தொழிலாளர்களோ, உறவினர்களோ, குடும்ப உறுப்பினர்களோ மற்றும் அவர்கள் சார்பாகச் செயல்படும் வேறு எந்த நபர்களோ வழக்கு 2ம் அயிட்ட சொத்தில் வாதிகளின் அமைதியான உடைமை மற்றும் அனுபவத்திற்கு எந்த வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கு 3ம் அயிட்ட சொத்தில் விவரிக்கப்பட்டுள்ள வழக்கு வண்டிப் பாதையைப் பயன்படுத்தவும் அனுபவிக்கவும் வாதிகளுக்கு உரிமை உண்டு என்று விளம்புகை பரிகாரம் கோரியும், வழக்கு 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்கு செல்வதற்கு அடைய

உள்ள ஒரே வழியான அயிட்டம் 3 தாவாச் சொத்துக்களில் பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்புகளை உடனே அகற்ற வேண்டும் என்று செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா செலவுத் தொகை கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>1. வாதிகள் தரப்பு திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்</u>:

1.1). 1ம் வாதியும், ஒரு பழனிசாமியும் சகோதரர்கள். அவர்கள் மாரப்ப கவுண்டரின் மகன்கள் ஆவார்கள். 2ம் வாதி பழனிசாமியின் மகன் ஆவார். 24.08.1997 அன்று வாதியும், பழனிசாமியும் சேர்ந்து அரசூர் கிராமம் க.ச. நெம்பர் 194 ல் 4.42 ½ ஏக்கர் நிலங்களை கூட்டாக, கிரையம் பெற்று இருவரும் தனிப்பட்ட அமைதியான அனுபவ சுவாதீனத்தில் 09.01.2009 வரை தொடர்ந்து இருந்து வந்தார்கள். 09.01.2009 ல் மேற்படி பழனிசாமி காலமாகிவிட்டார். மேற்படி பழனிசாமி 2ம் வாதியான தனது மகன் சுப்ரமணியத்திற்கு தனக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களை 22.03.2004 தேதியிட்ட உயில் சாசனத்தின் மூலம் உயில் எழுதி கொடுத்துள்ளார். வாதியும், பழனிசாமியும் தாவா வருவாய் பதிவேடுகளில் பெயர் மாற்றம் செய்து, அரசுக்கு வரி செலுத்தி வந்துள்ளார்கள்.

1.2). வாதிக்கு பாத்தியப்பட்ட அரசூர் கிராமம் க.ச.நெம்பர் 219 ல் இருந்து தாவாச் சொத்துக்கு பூமிக்கடியில் குழாய் அமைத்து தண்ணீர் கொண்டு வந்து தாவாச் சொத்துக்களில் 200 தென்னை மரங்களை நட்டுள்ளார்கள். பழனிசாமி காலமான பின்னர் அவர் எழுதிய உயில் சாசனம் அமுலுக்கு வந்து, அவரது மகன் 2ம் வாதி, பழனிசாமிக்குரிய தாவா சொத்தின் பங்கின் உரிமையாளர் ஆனார்.

1.3). இதுவரை வாதிகள் பாகம் செய்யாமல் தாவாச் சொத்துக்களை தனித்தனியாக பிரித்து அனுபவித்து வந்தார்கள். சொத்துக்களில் கிழபுறம் தென்வடல் வண்டிப்பாதை ஒன்று செல்கிறது. இதுவரையில் வாதிகள் அந்தப் பாதையில் தான்

தாவாச் சொத்துக்களை சென்றடைந்து வந்தார்கள். மேற்படி வாதிகள் வயலின் வடகோடியானது தென்கோடியை விட 1 முதல் 1 ½ அடி உயர்ந்துள்ளது. எனவே வடகோடிக்கு வாதிகளால் தண்ணீர் கொண்டு செல்ல முடியவில்லை, எனவே வாதிகள் வடகோடியில் மழைக்காலங்களில் மட்டும் பயிர் இடுவார்கள். தென்கோடியில் வழக்கம் போல் தென்னைமரங்கள் மற்றும் பணப்பயிர்கள் தொடர்ந்து பயிரிடுவார்கள்.

1.4). பிரதிவாதிகள் பக்கத்து நிலத்தின் உரிமையாளர்கள் ஆவார்கள். 1ம் பிரதிவாதி ஒரு பிரைவேட் லிமிடெட் கம்பெனி, அதன் பிரதிநிதி வி.கிருஷ்ணன் ஆவார். 2 முதல் 4 வரை உள்ள பிரதிவாதிகளின் பொது அதிகார முகவர் ஆவார். 07.07.2005 அன்று பிரதிவாதிகள் வாதிகளின் நிலத்தின் கிழபுறமும், வடபுறமும் உள்ள சொத்துக்களை ஜெயபிரகாஷ், ரத்தினம் ஆகியோர்களிடம் இருந்து கிரைய சாசனப்படி கிரையம் வாங்கியுள்ளார்கள். 10.07.1975 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரப்படி ஜெயபிரகாஷ், ரத்தினத்திற்கு அரசூர் கிராமம் காலை எண்.194 ல் ஏக்கர் 2.71 ¼ பரப்பளவுள்ள நிலமும், 09.03.1976 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரப்படி அரசூர் கிராமம் காலை எண்.195 ல் ஏக்கர் 1.14 பூமியானது பாத்தியமாகும்.

1.5). 1ம் பிரதிவாதியின் டெக்ஸ்டைல் மில் வாதிகளின் சொத்துக்களுக்கு கிழபுறம் 500 அடி தள்ளி இயங்கி வருகிறது, 2ம் பிரதிவாதி வாதிகளின் சொத்துக்களுக்கு கிழபுறம், வடபுறம் மற்றும் மேல்புறம் ஏக்கர் கணக்கில் சொத்துக்களை நேரடியாக வாங்கியுள்ளார். எனவே பிரதிவாதிகள் 1ம் வாதியையும், அவரது சகோதரர் பழனிசாமியையும் தாவாச் சொத்துக்களை குறைந்த விலைக்கு கேட்டதற்கு நிலங்களை விற்க சம்மதிக்கவில்லை. பிரதிவாதிகள் வாதிகளின் அனுபோகத்திற்கு இடையூறுகள் செய்தனர்.

1.6). 06.04.2007 தேதியில் பிரதிவாதிகளும், அவரின் வேலையாட்களும், அவரது ஆட்களும், சட்டவிரோதமாக தாவாச் சொத்தில் நுழைந்து கிழபுறமுள்ள தென்வடல் கிலுவன் வேலியை சேதப்படுத்தியும், வேலியாக அமைந்திருந்த வேப்ப மரங்களை அகற்றியும் மேலும் தாவாச் சொத்தின் வடபுறமுள்ள கிழமேல் பொழியை பொக்லைன் மிசின் கொண்டு சேதப்படுத்தியும் விட்டார்கள். மேலும் தாவாச் சொத்தின் மேல்புறமுள்ள தென்வடல் வேலியை அகற்றிவிட்டு வாதிகளின் சொத்துக்களில் இருந்து வடபுறமுள்ள 0.64 ½ நிலத்தை ஆக்ரமிப்பு செய்து பிரதிவாதிகள் பூமியுடன் இணைத்து வேலி போட்டுக் கொண்டுவிட்டார்கள். மேலும் வாதிகளின் சொத்துக்களுக்கு கிழபுறமும் தென்வடலாக ஒரு வேலி அமைத்து, வாதிகளின் சொத்துக்களுக்கு கிழபுறமுள்ள தென்வடல் பாதையை வாதிகள் உபயோகப்படுத்த முடியாமல் தடுத்துவிட்டனர். 64 ½ சென்ட் நிலம் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளது தாவா 1ம் அயிட்ட சொத்தாகும். வாதிகளின் மீத சொத்துக்களான தென்புறமுள்ள ஏக்கர் 3.78 தாவா 2ம் அயிட்ட சொத்தாகும். வாதிகளின் சொத்துக்களுக்கு கிழபுறமுள்ள வண்டித்தடம் தாவா 3ம் அயிட்ட சொத்தாகும்.

1.7). பிரதிவாதிகளின் சட்டவிரோத செயல் குறித்து சூலூர் காவல் நிலையத்தில் வாதிகள் புகார் கொடுத்து, 06.04.2007ம் தேதியில் தாவாச் சொத்தை பார்வையிட்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பிரதிவாதிகள் பணபலமும், அரசியல் பலமும் மிக்கவர்கள். அவர்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி காவல் துறை நடவடிக்கைகளை தடுத்துவிட்டனர். சென்னை உயர் நீதிமன்றத்தின் முன்பாக சூலூர் காவல் நிலையத்திற்கு எதிராக O.P.No.11343/2007 தாக்கல் செய்து சூலூர் காவல் நிலையத்தினர் தேவையான நடவடிக்கையை பிரதிவாதிகள் மீது எடுக்க வேண்டும் என வாதிகள் கோரியுள்ளார்கள். அதன் படி சூலூர் காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் மீது குற்ற எண்.272/2007 ல் இதர பிரிவு 147, 427, 447, 527 (ii) IPC படி

வழக்கு பதிவு செய்து, மேற்படி வழக்கு தவறானது என முடிக்கப்பட்டது. பின்னிட்டு பல்லடம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் CC.No.245/2009 தனிப்புகார் கொடுக்கப்பட்டு அது நிலுவையில் உள்ளது.

1.8). அதன் பின்னிட்டு பிரதிவாதிகள் 1ம் வாதி பெயரிலும், 1ம் வாதியின் சகோதரர் பழனிசாமி பெயரிலும் அசல் வழக்கு எண்.760/2007 வழக்கினை கோவை கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்தனர். அதில் 1ம் வாதியும், 1ம் வாதியின் சகோதரர் பழனிசாமியும் எதிருரை தாக்கல் செய்திருந்தார்கள். 14.12.2009 தேதியில் பிரதிவாதிகளும், அவரது ஆட்களும் 1ம் அயிட்ட சொத்தை 3ம் நபர்களுக்கு விற்க முயற்சி செய்தனர். மேலும் 2ம் அயிட்ட சொத்தில் வாதியின் அனுபவம் மற்றும் சுவாதீனத்திற்கு இடையூறு செய்ததை வாதி தடுத்துவிட்டார்.

1.9). வழக்கு நிலுவையில் இருந்தபோது, "1ம் வாதி தெய்வசிகாமணி 05.10.2023 அன்று உயில் எழுதாமல் இறந்துவிட்டார். அவர் தனது சொத்துக்களுக்கு மனைவி 3ம் வாதி, மகன்கள் சண்முகசுந்தரம் மற்றும் செந்தில் பிரகாஷ் 4 மற்றும் 5 வாதிகளை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். 1ம் வாதி தெய்வசிகாமணியின் மறைவுக்குப் பிறகு, அவரது வாரிசுகள் வழக்குச் சொத்தை பெற்று இன்றுவரை பாகப்பிரிவினை இல்லாமல் அதனை கூட்டாக உடைமையில் வைத்து அனுபவித்து வருகின்றனர்.

1.10). வழக்கு நிலுவையில் இருந்தபோது, 2ம் வாதி சுப்பிரமணியம் 30.08.2023 அன்று உயில் எழுதாமல் இறந்துவிட்டார். அவர் தனது மனைவி 6ம் வாதி மகேஸ்வரி, மகள்கள் 7ம் வாதி நிகிலா மற்றும் மைனர் 8ம் வாதி ஆகியோரை வாரிசாக விட்டு விட்டு இறந்துவிட்டார். 2ம் வாதியின் மறைவுக்குப் பிறகு, அவரது வாரிசுகள் வழக்குச் சொத்தை பெற்று, இன்றுவரை பாகப்பிரிவினை இன்றி கூட்டாக

உடைமையில் வைத்து அனுபவித்து வருகின்றனர். பிரதிவாதிகள், வழக்குச் சொத்தை வாதிகள் அமைதியாக உடைமையில் வைத்து அனுபவிப்பதற்கு தொடர்ச்சியாக இடையூறு விளைவிப்பதோடு, வழக்குச் சொத்தின் மீதான வாதிகளின் உரிமையிலும் தலையிடுகின்றனர். 1 மற்றும் 2 வாதிகளின் மறைவுக்குப் பிறகும், தலையீடு இன்னும் தொடர்கிறது. எனவே, 3 முதல் 8 வாதிகள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். வழக்கு நிலுவையில் இருந்தபோது 8 ம் வாதி மேஜராகிவிட்டார். தாவா பரிகாரம் கோரி வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

(Amended as per order in IA .No.8/2023, Dated:11.12.2023)

(Amended as per order in IA .No.18/2026, Dated: 21.01.2026)

**<u>2). பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>:**

2.1). வழக்கு பொய்யானது மோசடியானது, சட்டத்தின் படியும், பொருண்மைகளின் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. பிரதிவாதிகள் ஒப்புக் கொண்டவற்றை தவிர மற்றவற்றை வாதிகளே நிரூபிக்க வேண்டும். பிரதிவாதிகள் வாதிகளின் சொத்துக்கு அருகிலுள்ள வடக்கு மற்றும் கிழக்குப் பக்கத்தில் அமைந்துள்ள சொத்தின் உரிமையாளர்கள் ஆவார்கள். பிரதிவாதிகள் 2005 ஆம் ஆண்டில் பிரதிவாதிகளின் பவர் ஏஜென்ட் மூலம் சொத்தை கிரையம் பெற்று எந்த இடையூறும் இல்லாமல் சொத்தை அமைதியான முறையில் அனுபவித்து வருகின்றனர்.

2.2). 2007 ஆம் ஆண்டில் பிரதிவாதிகள் தங்கள் சொத்துக்களில் முள்வேலி வேலி அமைக்கத் தொடங்கினர். ஆனால் சொத்தின் மீது எந்த உரிமையும் இல்லாத தற்போதைய வாதிகள் வழக்குச் சொத்தில் மட்டுமல்லாமல், பிரதிவாதிகள் கோயம்புத்தூரில் உள்ள ஆர்.எஸ்.புரத்தில் அமைந்துள்ள சொத்திலும் இடையூறு செய்தனர். எனவே, பிரதிவாதிகள் 1ம் வாதி மற்றும் மற்றும் அவரது

சகோதரர் பழனிசாமி மீது தடை உத்தரவு கோரி வழக்குத் தொடர்ந்து, முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை உத்தரவை வழங்கினார். மேலும் அது தற்போது கோவை 3 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

2.3). மேலும், வாதிகள் காவல்துறையில் பொய்யான புகார் அளித்து நிறைய பிரச்சனைகளை கொடுக்கத் தொடங்கினர், ஆனால் விசாரணைக்குப் பிறகு எந்த ஆதாரமும் இல்லை என்று கண்டறிந்த காவல்துறையினர் நடவடிக்கைகளை கைவிட்டனர். உண்மையில், 1ம் வாதியும் பழனிசாமியும் தான் பிரதிவாதிகளின் சொத்து மற்றும் கோயம்புத்தூரில் அமைந்துள்ள சொத்துக்களை இடையூறு செய்ய முயன்றனர். வாதிகள் மட்டுமே இந்த பிரதிவாதிகளின் சொத்தில் தலையிட முயற்சிக்கின்றனர். தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3). வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் வழக்கு சான்றாவணங்கள் ஆகியவற்றை நன்கு பரிசீலனை செய்து கடந்த 28.11.2014 அன்று கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டது.**

**4). எழுவினாக்கள்:**

| | |
|---|---|
| **எழுவினா - 1** | Whether the plaintiffs are entitled to absolute owners of Item 1 of the suit property? |
| **எழுவினா - 2** | Whether the plaintiffs are entitled to recovery of possession? |
| **எழுவினா - 3** | Whether the plaintiffs are entitled to Permanent Injunction with respect of altering the physical features of the Item 1 of the suit property? |
| **எழுவினா - 4** | Whether the plaintiffs are entitled to absolute owner of the Item 2 of the suit property? |
| **எழுவினா - 5** | Whether the plaintiffs are entitled to get Permanent Injunction with respect of Item 2 of the suit property? |

| | |
|---|---|
| **எழுவினா - 6** | Whether the plaintiffs are entitled to declaration to use and enjoy the cart track in Item 3 of the suit property? |
| **எழுவினா - 7** | Whether the plaintiffs are entitled to get Mandatory Injunction to remove the obstructions in the Item 3 of the suit property? |
| **எழுவினா - 8** | To what other relief? |

**5).** இருதரப்பினருக்கும் இடையே உள்ள பிரச்சினைக் குறித்து முழுமையான தீர்வு காண வேண்டி கூடுதல் எழுவினாக்கள் பின்வருமாறு வனையப்படுகிறது.

**6. கூடுதல் எழுவினா 1:-**

| | |
|---|---|
| **கூடுதல் எழுவினா - 1** | Whether the suit is barred by Limitation? |

7). இரு தரப்பு சான்றாவணங்களை பரிசீலனை செய்து கூடுதல் எழுவினா தொடர்பாக புதிய சாட்சியங்கள் எதுவும் முன்னிடத் தேவை இல்லை என்று இந்நீதிமன்றம் மனநிறைவு கொள்கிறது.

**8). வாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விபரம் :-**

8.1). இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் 1ம் வாதி தெய்வசிகாமணி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.17 மற்றும் நீ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. ராமசாமி வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.18 மற்றும் சா.சா.ஆ.1 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. தண்டபாணி வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. பி.சா.1 குறுக்கு விசாரணையின் போது வா.சா.ஆ.19-ல் இருந்து ஆவணங்கள் குறியீடு செய்வதற்கு பதிலாக வா.சா.ஆ.18-ல் இருந்து தவறுதலாக குறியீடு செய்யப்பட்டது. எனவே பி.சா.1 குறுக்கு விசாரணையின் போது

வா.சா.ஆ.18 முதல் 21 வரையிலான குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் வா.சா.ஆ.19 முதல் 22 என திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

**9). பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விபரம் :-**

9.1). பிரதிவாதிகள் தரப்பில் பாலசுப்பிரமணியம் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. சூலூர் தாலுக்கா சர்வேயர் நிமலன் கிறிஸ்டோபர் பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு சா.சா.ஆ.2 முதல் சா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்வதற்கு பதிலாக சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் என தவறுதலாக குறியீடு செய்யப்பட்டது. எனவே சா.சா.ஆ.1 முதல் 5 என உள்ளதை சா.சா.ஆ.2 முதல் சா.சா.ஆ.6 என திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அரசூர் கிராம நிர்வாக அலுவலர் சுரேஷ்பாபு பி.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.13 முதல் 17 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையர் திருமதி சித்ரா பி.சா.4 ஆக விசாரிக்கப்பட்டு நீ.ம.சா.ஆ.4 முதல் நீ.ம.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. சூலூர் தாலுக்கா வட்ட சார் ஆய்வாளர் சதிஷ்குமார் பி.சா.5 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**10). வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் ஆவணம்:-**

10.1). வா.சா.1 மூலமாக 24.08.1977 தேதியிட்ட வாதி அவரது அண்ணன் பழனிசாமியுடன் சேர்ந்து வாங்கிய கிரய சாசனம் வா.சா.ஆ.1 ஆகவும், பழனிச்சாமி 09.01.2009 ல் காலமானதற்குண்டான இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.2 ஆகவும், தாவா சொத்தின் பட்டா பாஸ்புத்தகம் வா.சா.ஆ.3 ஆகவும், 2ம் வாதியின் தகப்பனார் பெயரிலுள்ள பட்டா பாஸ்புத்தகம் வா.சா.ஆ.4 ஆகவும், தாவா சொத்தின் வாதிகளின் பெயரில் உள்ள பட்டா (3 எண்ணிக்கை) வா.சா.ஆ.5 ஆகவும், தாவா சொத்தின் சிட்டா வா.சா.ஆ.6 ஆகவும், தாவா சொத்தின் 1ம் வாதியின் அடங்கல் வா.சா.ஆ.7 ஆகவும்,

தாவா சொத்தின் 2 ம் வாதியின் அடங்கல் வா.சா.ஆ.8 ஆகவும், தாவா சொத்தின் வாதி பெயரில் உள்ள கிஸ்து ரசீது வா.சா.ஆ.9 ஆகவும், 06.04.2007 ம் தேதி காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் வா.சா.ஆ.10 ஆகவும், மேற்படி புகாரினை காவல் நிலையத்தில் பெற்றுக் கொண்டதற்கான ரசீது வா.சா.ஆ.11 ஆகவும், குற்ற எண்.272/2007 ல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடத்தில் 1 ம் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணை குறிப்புகள் வா.சா.ஆ.12 ஆகவும், 1 ம் வாதி தாக்கல் செய்த புகார் வா.சா.ஆ.13 ஆகவும், அசல் வழக்கு எண்.760/2007 ல் 1 ம் வாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பிராது வா.சா.ஆ.14 ஆகவும், மேற்படி வழக்கில் 30.07.2014 ம் தேதி மூன்றாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புரை வா.சா.ஆ.15 ஆகவும், மேற்படி வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பாணை வா.சா.ஆ.16 ஆகவும், 07.07.2005 ம் தேதி பிரதிவாதிகளின் பெயரில் உள்ள கிரைய பத்திரம் வா.சா.ஆ.17 ஆகவும், நீதிமன்ற ஆணையரால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆகவும், நீதிமன்ற ஆணையரின் வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆகவும், சர்வேயரின் வரைபடம் நீ.ம.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது. வா.சா.2 மூலமாக 22.03.2004 தேதியிட்ட உயில் சாசனம் வா.சா.ஆ.18 ஆக குறியிடு செய்யப்பட்டது. வா.சா.3 மூலமாக ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வா.சா.1 முதல் 3 சாட்சிகள் வழக்குரையை ஒத்து சாட்சியமளித்துள்ளார்கள்.

10.2). பி.சா.1 குறுக்கு விசாரணையின் போது 10.07.1975 தேதியிட்ட செட்டில்மென்ட் பத்திரம் வா.சா.ஆ.19 ஆகவும், 29.03.1976 தேதியிட்ட செட்டில்மென்ட் ஆவணம் வா.சா.ஆ.20 ஆகவும், 29.04.1956 தேதியிட்ட கிரைய ஆவணம் வா.சா.ஆ.21 ஆகவும், 21.08.1960 தேதியிட்ட பாகசாசன ஆவணம் வா.சா.ஆ.22 ஆகவும், க.ச.எண்.194/9 க்குரிய சிட்டா வா.சா.ஆ.23 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது.

**11). பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் ஆவணம்:-**

பி.சா.1 மூலமாக பி.சா.1 பாலசுப்பிரமணியத்திற்கு சாட்சியம் அளிக்க அனுமதி கொடுத்த கடிதம் பி.சா.ஆ.1 ஆகவும், 1ம் பிரதிவாதி நிறுவனத்தின் அடையாள அட்டை பி.சா.ஆ.2 ஆகவும், 07.07.2005 தேதியிட்ட நடராஜன் வகையறா 1ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரம் பி.சா.ஆ.3 ஆகவும், 19.01.2006 தேதியிட்ட 1ம் பிரதிவாதி 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரம் பி.சா.ஆ.4 ஆகவும், 21.02.2006 தேதியிட்ட முத்துசாமி வகையறா 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரம் பி.சா.ஆ.5 ஆகவும், 26.07.2008 தேதியிட்ட பல்லடம் தாசில்தார் கொடுத்த சான்றிதழ் பி.சா.ஆ.6 ஆகவும், 05.01.2001 தேதியிட்ட சூலூர் வட்டாட்சியர் கொடுத்த தாவா சொத்திற்கான 10(1) பட்டா பி.சா.ஆ.7 ஆகவும், 05.01.2011 ல் தாவா சொத்திற்கு சூலூர் வட்டாட்சியர் கொடுத்த அடங்கல் அ-பதிவேடு பி.சா.ஆ.8 ஆகவும், 29.04.1956 தேதியிட்ட கிரையப் பத்திரம் பி.சா.ஆ.9 ஆகவும், 31.08.1966 தேதியிட்ட கிரையப் பத்திரம் பி.சா.ஆ.10 ஆகவும், 10.07.1975 தேதியிட்ட செட்டில்மென்ட் பத்திரம் பி.சா.ஆ.11 ஆகவும், 04.03.2024 தேதியிட்ட அரசூர் கிராம UDR பதிவேடு பி.சா.ஆ.12 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது. பி.சா.2 மூலமாக புல எண்.194 புலவரைபடம் சா.சா.ஆ.2 ஆகவும், ஆர்.எஸ்.ஆர் சா.சா.ஆ.3 ஆகவும், அ-பதிவேட்டின் இணையவழி சா.சா.ஆ.4 ஆகவும், பட்டா மாறுதல் உத்தரவு சா.சா.ஆ.5 ஆகவும், பட்டா உட்பிரிவு செய்யப்பட்டதற்கான உத்தரவு சா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது. பி.சா.3 மூலமாக UDR பதிவேடு பி.சா.ஆ.13 ஆகவும், அரசூர் கிராம புல எண்.194 க்கான புலப்படம், புல எண்.194/9 க்கான பட்டா எண்.1146 க்கான சிட்டா, அடங்கல் பதிவேடு, அரசூர் கிராமத்திற்கான கை-சிட்டா முறையே பி.சா.ஆ.14 முதல் பி.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்பட்டது. பி.சா.4 மூலமாக நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.4 ஆகவும், நீதிமன்ற ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ.5 ஆகவும், சர்வேயர் வரைபடம் நீ.ம.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது.

**12). வாதிகள் தரப்பு எழுத்துப் பூர்வமான வாதம் :-**

12.1). வாதிகள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தின் போது, தாவா சொத்துக்கள் ஆதியில் நடராஜ் என்பவருக்கு 29.04.1956 தேதியிட்ட கிரையப் பத்திரப்படி பல்லடம் தாலுக்கா, அரசூர் கிராமம் க.ச.எண்.194 நெம்பர் காலையில் தென்புறமாக பு.ஏ.5.42 ½ பூமி பாத்தியப்பட்டது. நடராஜ் கடந்த 24.8.1977 தேதியிட்ட வா.சா.ஆ.1 கிரைய பத்திரப்படி 1ம் வாதி தெய்வசிகாமணி பெயரிலும் அவரது சகோதரர் காலஞ்சென்ற பழனிசாமி பெயரிலும் கிரையம் செய்து கொடுத்துள்ளார். மேற்கண்ட இரண்டு கிரைய பத்திரங்கள் வா.சா.ஆ.1 மற்றும் 20 அடிப்படையில் வாதிகள் க.ச.எண்.194 நெம்பர் காலையில் பு.ஏ.4.42 ½ பூமியை கிரையம் பெற்றுள்ளனர். விவசாயம் செய்வதற்கு மேற்படி பு.ஏ.4.42 ½ பூமியில் கிணறு இல்லாததால், வாதிகளுக்கு பாத்தியப்பட்ட வேறொரு பூமியான க.ச.எண்.219 என்ற காலையிலிருந்து நிலத்திற்கு அடியில் குழாய் பதித்து தண்ணீர் எடுத்து வந்து விவசாயம் செய்து வருகின்றனர். அவ்வாறு அவர்கள் நிலத்திற்கடியில் தண்ணீர் எடுத்து வந்து விவசாயம் செய்து வருவதை முதல் நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

12.2). பிரதிவாதிகள் கோயமுத்தூர் மூன்றாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.760/2007-ல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து, வேண்டுமென்றே கடந்த 30.07.2017 ம் தேதியில் தள்ளுபடியாக விட்டுவிட்டனர். மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தெளிவாக வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தாவா 1ம் அயிட்ட சொத்து பிரதிவாதியின் வேறு பூமிக்குள் சேர்க்கப்பட்டு வேலி அமைக்கப்பட்டிருக்கின்ற விபரம் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா 2-ம் அயிட்டத்தில் வாதிகள் தென்னை, வாழை, மஞ்சள் ஆகிய பயிர்கள் பயிரிட்டு வருவது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தாவா 3-வது அயிட்ட சொத்தான தென்வடல் வண்டிப்

பாதையிலிருந்து வாதிகள் தங்களது பூமிக்குள் நுழையாமல் தடுக்கும் பொருட்டு, வாதிகள் பூமியில் கிழபுற எல்லையில் தென்வடலாக பிரதிவாதிகள் கம்பிவேலி அமைத்துள்ளனர் என்ற விவரமும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு பிரதிவாதிகள் தரப்பில் எந்தவிதமான ஆட்சேபணையும் செய்யவில்லை.

12.3). 25.03.2012 தேதியில் தாவாச் சொத்தை பார்வையிட போவதாகவும், நில அளவையர் உதவியுடன் அளவீடு செய்ய போவதாக பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞருக்கு அறிவிப்பு கொடுத்தபோது நீதிமன்ற ஆணையர் நியமித்ததை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்போவதாக கூறி ஆணையர் பார்வையிடும்போது உடன்வர முடியாது என்றும் எழுதி கொடுத்து, நீதிமன்ற ஆணையர் அளந்தபோது பிரதிவாதிகள் தரப்பில் யாரும் அங்கு வரவில்லை.

12.4). 07.07.2005 தேதியிட்ட கிரைய பத்திரத்தில் பிரதிவாதிகளின் நிறுவனமானது 9 தனிப்பட்ட நபர்களிடமிருந்து அதாவது ஒரே குடும்பத்தைச் சேராத தனிப்பட்ட நபர்களிடமிருந்து மேற்படி 9 பேர்களுக்கும் தனித்தனியாக ஆவணங்களின் மூல அடிப்படையில் பாத்தியப்பட்ட சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு 9 தனிப்பட்ட நபர்களிடம் இருந்து ஒரே கிரைய பத்திரத்தின் அடிப்படையில் கிரையம் பெற வேண்டிய அவசியம் இல்லை.

12.5). பி.சா.ஆ.3, 07.07.2005 கிரைய பத்திரத்தில் க.ச.எண்.194/4 நம்பர் காலையில் பு.ஏ.1.48-ஐ மேற்படி கிரையப்பத்திரத்தில் 6, 7 இலக்கமிட்டவர்களாக குறிப்பிடப்பட்டுள்ள ஜெயபிரகாஷ் மற்றும் ரத்தினம் ஆகியோர்களிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார்கள். மேற்படி ரத்தினம் என்பவர் ஜெயபிரகாஷின் தாயார். மேற்கண்ட 07.07.2005 தேதியிட்ட கிரைய பத்திரத்தில் முதல் இரண்டு பக்கங்களில் கிரையம்

கொடுத்த 6, 7 இலக்கமிட்டவர்களான ஜெயப்பிரகாஷ் மற்றும் ரத்தினம் ஆகியோர்களுக்கு கடந்த வா.சா.ஆ.18 10.07.1975 மற்றும் வா.சா.ஆ.19 29.03.1976 தேதியிட்ட செட்டில்மென்ட் பத்திரங்களின் படி பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 10.07.1975 மற்றும் 29.03.1976 தேதியிட்ட பத்திரங்களின் அடிப்படையில் தங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை கிரையம் செய்து கொடுப்பதாக கடந்த 07.07.2005 தேதியிட்ட கிரையப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் வருவாய்த்துறை பதிவேடுகளின் பத்திரத்தில் அடிப்படையில் அல்லது நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் போது வழங்கிய பட்டாவின் (UDR) அடிப்படையில் சொத்துக்களை கிரையம் செய்து கொடுப்பதாக குறிப்பிடவில்லை.

12.6). 10.07.1975 தேதியிட்ட செட்டில்மென்ட் பத்திரத்தில், ஜெயபிரகாஷ் மற்றும் ரத்தினத்திற்கு கச.எண்.194 நெம்பர் காலை ரங்கம்மாள் பூமிக்கும் வடக்கு, ரங்கம்மாள் பூமிக்கு மேற்கு, கிருஷ்ணன் பூமிக்கும் கிழக்கு, சுப்பையா கவுண்டர் பூமிக்கும் தெற்கு இதன் மத்தியில் 2.71 ¼ பூமியைத்தான் எழுதிக் கொடுத்துள்ளார். கடந்த 07.07.2005 தேதியிட்ட பிரதிவாதிகளின் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தில் சொத்து விவரத்தில் க.ச.194/4 நெம்பர் காலையில் பு.ஏ 1.48-ம், க.ச.194/9 காலையில் பு.ஏ. 0.47-2/10-ம், க.ச.194/14 காலையில் பு.ஏ.0.20-ம், க.ச.194/15 காலையில் பு.ஏ.1.16 ம் ஆக ஒட்டு பு.ஏ.3.33 பூமியை கிரையம் செய்து கொடுத்துள்ளார். "அதாவது 10.07.1975 செட்டில்மென்ட் பத்திரம் மூலம் ஜெயப்பிரகாஷ், ரத்தினம் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட க.ச.எண் 194 ஆம் நெம்பர் காலையில் பு.ஏ.2.71 ¼ பூமியை விட கூடுதலாக குறிப்பாக 63 சென்ட் பூமி கூடுதலாக பு.ஏ.3.33 பூமியை கிரையம் செய்து கொடுத்துள்ளனர். அவ்வாறு கூடுதலாக கிரையம் செய்து கொடுத்த பு.ஏ.0.63 மேற்படி ஜெயபிரகாஷ் ரத்தினம் ஆகியோர்களுக்கு எப்படி பாத்தியப்பட்டது" என்ற எந்த விவரமும் 07.07.2005 தேதியிட்ட கிரைய பத்திரத்தில் இல்லை. குறிப்பாக

வருவாய்த்துறை பதிவேடுகளின் படி பாத்தியப்பட்ட சொத்தை கிரையம் செய்து கொடுப்பதாக எந்த ஒரு வாசகமும் இல்லை.

12.7). ஜெயப்பிரகாஷ் மற்றும் ரத்தினம் ஆகிய இருவரும் தங்களுக்கு பாத்தியம் இல்லாத சொத்தான க.ச.எண்.194 நம்பர் காலையில் பு.ஏ.0.63 சேர்த்து கிரையம் செய்து கொடுத்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல. அதைப்பொறுத்து பி.சா.ஆ.3, 07.07.2005 தேதியிட்ட கிரையப்பத்திரம் செல்லாது. வாதிகளை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது. மேலும் பிரதிவாதிகளுக்கு கூடுதலாக எழுதிக்கொடுக்கப்பட்ட பு.ஏ.0.63 விஸ்தீரணமுள்ள பூமி பாத்தியம் ஏற்படாது.

12.8). கடந்த 24.08.1977-ல் வாதிகள் நடராஜ் என்பவரிடமிருந்து தான் (வா.சா.ஆ.1) தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களான பு.ஏ.4.42 ½ -ஐ கிரையம் பெற்றுள்ளார். மேற்படி நடராஜ் என்பவருக்கு 29.04.1956-ம் தேதியிட்ட கிரைய பத்திரப்படி க.ச.194 நெம்பர் காலையில் பு.ஏ.5.42 ½ பூமி பாத்தியப்பட்டுள்ளது. அவ்வாறு பாத்தியப்பட்ட பு.ஏ.5.42 ½-ல் பு.ஏ.4.42 ½ வாதிகளுக்கு கடந்த 24.08.1977 ல் கிரையம் செய்து கொடுத்துள்ளார். ஆதலால் மேற்படி நடராஜுக்கு க.ச.194-ல் மீதமுள்ளது பு.ஏ.1.00 மட்டுமே. இவ்வாறான சூழ்நிலையில் பிரதிவாதிகள் மேற்படி நடராஜனிடம் இருந்து பு.ஏ.1.21 க.ச.எண்.194/13 என்ற உட்பிரிவின் கீழ் கிரையம் பெற்றதாக 07.07.2005-ல் கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளனர். மேற்படி நடராஜரனுக்கு 1.00 ஏக்கர் மட்டுமே பாத்தியமிருக்கின்ற நிலையில் எந்த அடிப்படையில் பு.ஏ.1.21 பூமியை கிரையம் பெற்றனர் என்பது குறித்து எந்த விளக்கமும் இல்லை.

12.9). கூடுதல் விஸ்தீரணம் கிரயம் பெற்றது குறித்து எந்த விளக்கமும் எதிர் வழக்குரையிலும், சாட்சியங்களிலும் இல்லை. அவ்வாறு 0.21 ஏக்கரை கூடுதலாக தங்களது கிரைய பத்திரத்தில் பிரதிவாதிகள் குறிப்பிட்டு கிரையம் பெற்றுள்ளது சட்டப்படி செல்லாது. இது வாதிகளை எந்த விதத்திலும்

கட்டுப்படுத்தாது. 07.07.2005 கிரையப் பத்திரத்தில் கண்ட சொத்துக்கு நான்கெல்லை குறிப்பிடவில்லை. 07.07.2005-ல் கிரையம் கொடுப்பவர்களான 1-இலக்கமிட்ட நடராஜ் மற்றும் 6-இலக்கமிட்ட ஜெயப்பிரகாஷ் 7-லக்கமிட்ட ரத்தினம் ஆகியோர்களை இந்த வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை.

12.10). பிரதிவாதிகள் நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அவர்களது கிரைய முன்னோர்களுக்கு பட்டா கொடுத்திருப்பதாகவும், அந்த பட்டாவின் அடிப்படையில் கிரையம் பெற்றதாகவும், பிரதிவாதி தரப்பு சாட்சி-1 இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார். 07.07.2005 தேதியிட்ட கிரைய பத்திரத்தில் எந்த ஒரு கிரைய முன்னோரும் தனக்கு நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் படி வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் கிரையம் செய்து கொடுப்பதாக குறிப்பிடவில்லை. மாறாக அவர்களுக்கு பத்திரப்படி பாத்தியப்பட்ட சொத்தை தான் கிரையம் செய்து கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

12.11). பிரதிவாதிகளின் கிரைய முன்னோர்கள் கூடுதல் விஸ்தீரனத்திற்கு பட்டா பெற்றுவிட்டனர் என்ற விவரமும், வாதிகளுக்கு குறைவான விஸ்தீரணத்திற்கு தான் நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்ற விவரமும் 1ம் வாதிக்கும், அவரது சகோதரரும் கல்வியறிவு அற்றவர் என்பதால் பட்டா வழங்கியபோது அவர்களுக்கு தெரியவில்லை.

12.12). 07.07.2005-கிரய பத்திரத்தின் சொத்து விவரத்தில் "194/9-ல் நம்பர் காலையில் தென்வடல் மற்றும் கிழமேல் தடம் பு.ஏ.0.59-க்கு இதில் பொதுவில் 4/5 பங்கு பு.ஏ.0.47-2/10 என்று குறிப்பிடப்பட்டுள்ளது" பின்னும் 10.07.1975-ஜெயப்பிரகாஷ், ரத்தினம் பெயரில் உள்ள செட்டில்மென்ட் பத்திரத்திலும் சொத்து விவரத்தில் கடைசியில் "வாரி வாய்க்கால்களில் பொதுவில் பாதியும் தடம் களம் வகையறா, சகிதம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது,

12.13). தற்போதும் ஆவணங்கள் மேற்படி வண்டித்தடம் க.ச.நம்பர்.194/9 என்ற உட்பிரிவின் கீழ் பு.ஏ.0.59 என்ற விஸ்தீரணத்தில் கூட்டுவண்டிப்பாதை என்று தனியாக உட்பிரிவாகியுள்ளது. அதுவும் வாதிகள் பெயரிலும், பிரதிவாதிகள் பெயரிலும், மற்றவர்கள் பெயரிலும் கூட்டு வண்டித்தடம் என்று உட்பிரிவாகியுள்ளது. அந்த வண்டித்தடம் க.ச.எண்.194, 195 மற்றும் 197 உரிமையாளர்கள் தொடர்ந்து உபயோகப்படுத்தி வந்தனர். பிரதிவாதிகள் அந்தப்பகுதியில் க.ச.194, 195 மற்றும் 197-ல் உள்ள விவசாயிகளிடம் உள்ள பூமியை கிரையம் பெற்றவுடன் குறிப்பாக கடந்த 07.07.2005-ல் 9 தனிப்பட்ட குடும்பங்களிலும் இருந்து சொத்துக்களை கிரையம் பெற்றவுடன் வேண்டுமென்றே அந்த வண்டித்தடத்தை அழித்துவிட்டனர்.

12.14). அந்த வண்டித்தடமானது வாதிகள் பூமிக்கு அதாவது வாதிகள் கிரையம் பெற்றுள்ள பு.ஏ.4.42 ½ க்கு கிழபுறமாக அமைந்துள்ளது. அதை வாதிகள் கடந்த 06.04.2007 வரை தொடர்ந்து தங்களுடைய பூமிக்கு வண்டி வாகனாதி வகையறாக்களை கொள்ளுப்பாளையம் வரை ஓட்டிச்சென்று உபயோகப்படுத்தி வந்தனர். கடந்த 06.04.2007-ல் பிரதிவாதிகள் வேண்டுமென்றே வாதிகள் வண்டித் தடத்தை உபயோகிக்காத வண்ணம் பூமியின் கிழபுறமாக தென்வடலாக கம்பிவேலி அமைத்து, அடைத்து, வண்டித்தடத்தை ஆக்கிரமித்து அவர்களது பூமிக்குள் சேர்த்து விவசாய பூமியாக மாற்றியுள்ளனர்.

12.15). இரு நீதிமன்ற ஆணையர் அறிக்கையிலும், நில அளவையர் வரைபடத்திலும் தென்வடல் வண்டிப்பாதையை பிரதிவாதிகள் ஆக்கிரமித்து விவசாய பூமிக்குள் சேர்த்து இருப்பதை குறிப்பிட்டுள்ளனர். ஆதலால் வாதிகள் கோரிய செயலுறுத்து கட்டளை பரிகாரம் வழங்க வேண்டியது அவசியமானதும், நியாயமானதாகும். நீதிமன்ற ஆணையர், திருமதி.சித்ரா அவர்கள், அவர்களது அறிக்கையில் அவருடைய வரைபடத்திலும், நில அளவையர் வரைபடத்திலும் க.ச.எண். 194/9 என்ற வண்டிப்பாதையில் ஒரு சிறு பகுதியான பு.ஏ.0.06-ஐ வாதிகள்

ஆக்கிரமித்துள்ளதாக தவறுதலாக குறிப்பிட்டுள்ளார். உண்மையில் மேற்படி பொது வண்டித் தடத்திற்கு மேற்புறமாக, வாதிகள் பூமிக்கு கிழபுறமாகவும், தென்வடலாக முட்கம்பிவேலி அமைத்தது பிரதிவாதிகள் தான். இந்நிலையில் வாதிகள் அந்த முட்கம்பி வேலிகளுக்கு மேல்புறமாக பு.ஏ.0.06-ஐ ஆக்கிரமித்ததாக கூறுவது தவறு. வாதிகள் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் செய்யவில்லை.

12.16). நீதிமன்ற ஆணையரான வழக்கறிஞர் சித்ரா அவர்கள் அளவீடு செய்யும் போது, தாவா சொத்திலும் பிரதிவாதிகள் சொத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளியை தவிர வேறு எந்த பகுதியிலும் சர்வே கல் இல்லை என்பதையும் ஆதலால் மற்ற பகுதிகளில் சர்வே கல் இருக்கும் புள்ளிகளை அளந்து சரி பார்த்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். நில அளவையர் சர்வே கற்கள் அதாவது உட்பிரிவு எல்லைக்கற்கள் அமையும் புள்ளிகளை அவர் சரிவர அளந்து நிர்ணயம் செய்யவில்லை. சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவின்படி இரண்டு நீதிமன்ற ஆணையர் அறிக்கைகளும் ஒருசேர பரிசீலிக்க வேண்டும்.

12.17). வாதிகளுடைய பூமிக்கு தென்புறமாக அரசுக்கு பாத்தியப்பட்ட மந்தை அமைந்துள்ளது. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமிக்கு வடபுறமும், கிழபுறமும் மேபுறமும் ஆகிய மூன்று புறங்களிலும் பிரதிவாதிகள் பூமி மட்டுமே அமைந்துள்ளது. உண்மையில் வாதிகள் 24.08.1977-ல் பு.ஏ.442 ½ கிரையம் பெற்றுள்ளனர். ஆனால் முதலாவது நீதிமன்ற ஆணையர் அறிக்கையின்படி வாதிகள் அனுபவித்து வரும் பகுதி தாவா 2ம் அயிட்டச் சொத்தான 3.78 மட்டுமே மீதமுள்ள பு.ஏ.0.64 ½ பூமியை பிரதிவாதிகள் தாவா 1ம் அயிட்ட சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். மேலும் வாதிகளுடைய பூமியை சுற்றி மூன்று புறங்களிலும் பிரதிவாதிகள் சொத்து இருக்கும்போதும் மற்றொரு பகுதியில் அரசு சொத்து இருக்கும்போதும் வாதிகளின் பூமியை பிரதிவாதிகளை தவிர வேறு யாரும் ஆக்கிரமிப்பு செய்ய முடியாது. பிரதிவாதிகள் தான் வாதிகளுடைய பு.ஏ.0.64 ½ பூமையை ஆக்கிரமிப்பு

செய்துள்ளனர்.

12.18). தாவா 3ம் அயிட்ட சொத்தான பொது வண்டித்தடம் இருப்பதை வருவாய்த்துறை பதிவேடுகளில் பதியப்பட்டுள்ளது என்பதை குறுக்கு விசாரணையில் பிரதிவாதிகள் ஒப்புக்கொள்கிறார்கள். பிரதிவாதிகள் இந்த வாதிகளுடைய சொத்தை அபகரிக்கும் எண்ணத்ததில் வருவாய்த்துறை UDR பதிவேட்டில் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தாவா 1ம் அயிட்டத்தை சேர்த்து ஜெயப்பிரகாஷ், ரத்தினம் ஆகியோர்களது பெயரில் க.ச.194/4-கீழ் உட்பிரிவு ஆகியுள்ளதை பிரதிவாதி சாதகமாக பயன்படுத்திக்கொண்டு வாதிகளுடைய 1ம் அயிட்ட சொத்தையும் சேர்த்து கிரையம் பெறும் கெட்ட எண்ணத்துடனும், அவ்வாறு சேர்த்து கிரையம் செய்வது வெளியில் தெரியாமல் இருக்கும்பொருட்டு 9-நபர்களிடமிருந்து ஒரே கிரைய பத்திரத்தின் கீழ் கிரையம் பெற்றுள்ளார்கள். தாவா பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என வாதிடப்பட்டது.

12.19). *மேலும் வாதிகள் தரப்பில் 2018 (2) MWN (Civil) 677, 2022 (2) MWN (Civil) 38, 2018 (5) CTC 883, 1999 (III) CTC 650, 2018 (1) CTC 554 ஆகிய மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்ற தீர்ப்புகளை மேற்கோள் காட்டி வாதிடப்பட்டது.*

**<u>13). பிரதிவாதிகள் தரப்பு எழுத்துபூர்வமான வாதத்தின் சுருக்கம்</u>** :-

13.1). பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தின் போது வழக்குச் சொத்தின் 1ம் அயிட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 0.64 ½ ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலமானது, சர்வே எண் 194-ன் ஒரு பகுதியாகும். வழக்குச் சொத்தின் 2ம் அயிட்டம் 3.78 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலமானது, சர்வே எண்கள் (S.F No.) 194/5, 194/6, 194/7 மற்றும் 194/8 ஆகியவற்றில் அமைந்துள்ளது. வழக்குச் சொத்தின் 3-ம் அயிட்டம், சர்வே எண் 194/9-ல் அமைந்துள்ளது. வாதித் தரப்பினர், வழக்குச் சொத்தின் 1 மற்றும் 2 அயிட்டத்திற்குரிய எல்லைகளை, எவ்விதமான

அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்கள் எதுவும் இல்லாமல், தங்களின் சொந்த அனுமானத்தின் அடிப்படையிலேயே குறிப்பிட்டுள்ளனர். வாதித் தரப்பினரால் A3 மற்றும் A4 எனக் குறிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட பட்டா பாஸ் புத்தகங்கள், சர்வே எண் 194/4-இன் தென்பகுதியில் அமைந்துள்ளதும், 0.64 ½ ஏக்கர் பரப்பளவு கொண்டதுமான வழக்கு 1ம் அயிட்ட சொத்தின் மீதான உரிமையை வாதித் தரப்பினருக்கு ஏற்படுத்தவில்லை. வழக்கு சொத்து விவரப் பட்டியலில் உள்ள 1 முதல் 3 அயிட்ட சொத்திற்குரிய உட்பிரிவு எண்களைக் குறிப்பிடாமல் மறைத்துள்ளனர்.

13.2). 2002-ம் ஆண்டிலேயே வழங்கப்பட்ட ஆவணங்கள் வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆகியவை, சர்வே எண்.194-ன் உட்பிரிவு எண்கள் உள்ள நிலையில் உட்பிரிவு எண்களைக் குறிப்பிடவில்லை. வாதிகள் வழக்குரையை திருத்தி, அந்த உட்பிரிவு எண்களைச் சேர்க்கவில்லை. மேலும், I.A. எண்.10/2024-ல் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர்/ஆணையருக்கு வழங்கிய அறிவுறுத்தல் குறிப்பில் கூட, வழக்குச் சொத்தின் 1ம் அயிட்ட சொத்து சர்வே எண் 194/4-ல் தான் அமைந்துள்ளது என்பதை வாதிகள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

13.3). வாதிகள் 1977-ஆம் ஆண்டிலேயே வருவாய் ஆவணங்களில் தங்களின் பெயருக்குப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு அதற்கான வரியை செலுத்தியதாக பாஸ் புத்தகமும், அடங்கல் பதிவேடும் தங்கள் பெயரிலேயே உள்ளதாக சொல்லியுள்ளார்கள். சர்வே எண் 194/5, 6, 7 மற்றும் 8-ல் அமைந்துள்ள 3.78 ஏக்கர் பரப்பளவிற்கான சிட்டா, பட்டா மற்றும் அடங்கல் ஆவணங்கள் வாதி தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகையால், தற்போதைய நிலையில் சர்வே எண் 194/4-ன் மீது எவ்வித உரிமையையும் கோர இயலாது.

13.4). அரசாங்கத்தால் பராமரிக்கப்படும் பட்டா மற்றும் சிட்டா ஆவணங்களின் அடிப்படையில், நிலங்கள் தொடர்பான வருவாய் கணக்குகளைச்

சரிபார்க்கும் 'ஜமாபந்தி' (Jamabandi) நடைமுறை மேற்கொள்ளப்படுகிறது. ஆவணங்களில் ஏதேனும் முரண்பாடுகள் இருப்பின், அது குறித்து வருவாய் கோட்டாட்சியரிடம் (RDO) தெரிவித்து, நில உரிமையாளர்களுக்கு அவர்களின் உரிமை குறித்து அறிவிப்பு அளித்த பிறகு, வருவாய் அதிகாரிகள் ஆண்டுதோறும் அத்தகைய பிழைகளைத் திருத்தி அமைப்பது வழக்கமாகும். இருப்பினும், 24.08.1977 தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் மூலம் வாதி தரப்பினர் சொத்தை வாங்கிய நாளிலிருந்து 49 ஆண்டுகள் கடந்த பின்னரும் கூட, பட்டா அல்லது UDR ஆவணங்களில் உள்ள முரண்பாடுகளைச் சரிசெய்ய அவர்கள் வருவாய்த் துறையை அணுகவில்லை. மாறாக, திடீரென 2010-ஆம் ஆண்டில், சொத்தின் உடைமையை மீட்டெடுப்பதற்காக அவர்கள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு, 'காலவரையறைச் சட்டத்தின்' (Law of Limitation) கீழ் முற்றிலும் தடைசெய்யப்பட்ட ஒன்றாகும்.

13.5). பிரதிவாதி தரப்பினரின் விற்பனையாளர்களான ரத்தினம் மற்றும் ஜெயப்பிரகாஷ் ஆகியோர், சர்வே எண் 194/4 ல் அமைந்துள்ள தங்களின் சொத்தை, 10.07.1975 மற்றும் 29.03.1976 ஆகிய தேதிகளிலிடப்பட்ட இரண்டு 'செட்டில்மென்ட் பத்திரங்கள்' (Settlement Deeds) வாயிலாகப் பெற்றனர் என்பதை, வாதி தரப்பினர் ஒப்புக்கொண்டுள்ளனர். பி.சா.ஆ.10, 31.08.1966 செட்டில்மென்ட் பத்திரங்களை எழுதி வைத்தவரான ரங்கசாமி கவுண்டர் என்பவர், மேற்படி நிலப்பரப்பை பழனிசாமி கவுண்டர் என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கினார். பி.சா.ஆ.9, 29.04.1956 தேதியிட்ட விற்பனைப் பத்திரத்தின் மூலம் பழனிசாமி கவுண்டர் என்பவர் விலைக்கு வாங்கினார். எனவே, சர்வே எண் 194/4 - ல் அமைந்துள்ள 1.48 ஏக்கர் நிலப்பரப்பு முழுவதையும் பிரதிவாதி தரப்பினரின் விற்பனையாளர்கள் தங்கள் உடைமையில் வைத்துள்ளனர் என்பது தெளிவாகிறது. இது குறித்து வாதி தரப்பினர் காலதாமதத்திற்குப் பிறகு கேள்விக்குள்ளாக்க எவ்வித உரிமையும் இல்லை.

13.6). மேலும், தங்கள் விற்பனையாளர்களுக்கு உரிமையிருந்த அளவை விட அதிகமான நிலப்பரப்பிற்கு, பிரதிவாதிகள் விற்பனைப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டதாக வாதி தரப்பினர் குற்றம் சாட்டினாலும், 07.07.2005 தேதியிட்ட, கிரைய ஆவண எண் 4121/2005- பத்திரத்தை ரத்து செய்யக்கோரும் நிவாரணத்தை வாதி தரப்பினர் கோரியிருக்க வேண்டும். அவ்வாறு கோராத நிலையில், இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. அதுமட்டுமின்றி, விற்பனைப் பத்திரம் என்பது ஒரு பொது ஆவணமாகும். அவ்வாறிருக்கையில், அந்தப் பத்திரத்தால் வாதி தரப்பினர் காலதாமதத்தால் பாதிக்கப்பட்டிருந்திருப்பின், விற்பனைப் பத்திரம் நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் அவர்கள் இவ்வழக்கைத் தாக்கல் செய்திருக்க வேண்டும்.

13.7). காலாவதியாகிவிட்டது என்பதை அறிந்து வாதி பிரதிவாதிகளின் 07.07.2005 தேதியிட்ட விற்பனைப் பத்திரத்திற்கு எதிராக நிவாரணம் கோருவதை தவிர்த்துவிட்டனர். 1977-ஆம் ஆண்டிலேயே சொத்தை வாங்கிய உடனேயே வருவாய் ஆவணங்களில் அவர்களின் பெயர்கள் மாற்றம் (Mutation) செய்யப்பட்டுள்ளன. அவ்வாறெனில், 1977-ஆம் ஆண்டிலேயே சர்வே எண்.194 - ல் உள்ள 4.42 ½ ஏக்கர் நிலம் தங்கள் வசம் இருந்தது என்பதை மெய்ப்பிக்கும் வகையிலான ஆவணங்களை வாதி தரப்பினர் தாக்கல் செய்திருக்க வேண்டும்.

13.8). தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறை, 1970 மற்றும் 1985 ஆகிய ஆண்டுகளில் 'பட்டா பாஸ்' (Patta Pass) ஆவணங்களை வழங்கியுள்ளது. அந்தந்த நில உரிமையாளர்களின் நில உடைமையை நிரூபிக்க இந்த ஆவணங்களே போதுமான சான்றுகளாகும். இருப்பினும், வாதி தரப்பினர் அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏனெனில், அவ்வாறு தாக்கல் செய்திருந்தால், 1977-ஆம் ஆண்டில் அவர்கள் வசம் இருந்தது வெறும் 3.78 ஏக்கர் நிலம் மட்டுமே என்பது நிரூபணமாகிவிடும். எனவே, வழக்குத்

தொடர்வதற்கான அடிப்படை முகாந்திரம் இல்லாத காரணத்தினால், வாதி தரப்பினரின் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும்.

13.9). கடந்த 49 ஆண்டுகளாக வருவாய் ஆவணங்களில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு கோரி வருவாய்த் துறையை அணுகவில்லை. இரண்டாவது ஆணையர் (Commissioner) தாக்கல் செய்த அறிக்கையில் அவர் ஆய்வு மேற்கொண்ட சமயத்தில் அங்கு எவ்விதமான வண்டிப் பாதையும் இருக்கவில்லை என்பதை குறிப்பிட்டுள்ளார். மாறாக, வாதி தரப்பினர் மட்டுமே பிரதிவாதிகளுக்குச் சொந்தமான நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் என்பதை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். "க.ச.194/9 நெ காலையில் அவர்களுக்கு தடம் இருப்பதாக சொன்னார்கள். ஆனால் பௌதீக அமைப்பில் க.ச. எண். 194/9 நெ. காலையில் தடம் இருந்ததற்கான அமைப்பு பார்வையிடும்போது காணப்படவில்லை" என சொல்லியுள்ளார்.

13.10). அரசூர் கிராமம் க.ச. எண். 194/4 நெ. காலையில் 1.48 ஏக்கர் சரியாக இருந்தது. அதில் பூமியின் விஸ்தீரணத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. மேலும் பூமிக்கான சர்வே கல் 194/4 காலையின் தென்மேற்கு அறுதி க.ச. எண். 194/5 -ன் வடமேற்கு அறுதியில் FMB யில் பாயிண்ட் சரியாக இருந்ததை, மேற்புறம் மற்றும் தென்புறம் இருபக்க சர்வேகற்கள் மூலம் அனைவர் முன்னிலையிலும் சரிபார்க்கப்பட்டது.

13.11). வாதிகள் பூமியினை ஒட்டி கிழபுறம் க.ச. எண். 194/9 நெ. காலை உள்ளது. மனுதாரர்களின் ஆவணம் எண். 4121/2005-ன் படி க.ச.எண்.194/9 பு.ஏ 0.56 ஏக்கரில் பொதுவில் 4/5 பங்கும், ஆவண எண் 1362/2006-ன் படி 0.59 ஏக்கரில் 1/8 பங்கும் என இருந்தது. மேற்படி இரு ஆவணங்கள் படி 0.50 ஏக்கர் பூமியும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக இருந்தது. மேலும் மேற்படி காலை முழுவதும்

பார்த்ததில் வண்டித்தடம் ஏதும் காணவில்லை. மேற்படி காலை முழுவதும் தென்னை மரங்கள் வைத்து விவசாயம் செய்யப்பட்டு இருந்தது.

13.12). க.ச.எண்.194/9 நெ காலையில் மட்டும் எதிர்மானுதாரர்/வாதியின் ஆக்கிரமிப்பில் உள்ளது. அதனை வட்ட நில அளவையர் நீல வண்ணத்தில் குறிப்பிட்டு உள்ளார். அதன்படி க.ச.எண்.194/9 நெ. காலையில் தென்புற பகுதியில் மேல்புறம் 4.4 மீட்டரும் அதிலிருந்து வடக்கே 194/8 நெ. காலையில் வடமேற்கே 22 மீட்டரும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.

13.13). இரண்டாவது ஆணையரின் அறிக்கையை ரத்து செய்யுமாறு கோரி வாதி தரப்பினரால் எவ்வித மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மாறாக, வாதி தரப்பினருக்கு மாற்றுப் பாதை வசதி உள்ளதென்றும், அவர்கள் குறிப்பிடும் வண்டிப் பாதையானது ஒரு பொதுப் பாதை அல்லாததால் அதன் மீது அவர்களால் எவ்வித நிவாரணத்தையும் கோர இயலாது என்றும் வாதிடப்பட்டது. மேலும், அங்கே அத்தகைய வண்டிப் பாதை ஏதுமே இல்லை என்றும் கூறப்பட்டது.

13.14). மேற்கூறியவற்றிற்குப் பாதகமின்றி, வழக்குச் சொத்தின் 1 ம் அயிட்டத்தில் வாதிக்கு உரிமை உண்டு என்று அனுமானித்துக் கொண்டாலும், மனுவின் வாதங்களின்படி, அவர்கள் 1977 ஆம் ஆண்டு, அதாவது வாங்கிய தேதியிலிருந்தே, அதுபற்றி அறிந்திருந்தனர். அப்படியிருந்தும், 49 ஆண்டுகள் கடந்த பின்னரும் (2010 இல் வழக்குத் தாக்கல் செய்ததைத் தவிர) அவர்கள் தங்களுடைய உரிமை ஏதேனும் இருந்தால், பயன்படுத்தவில்லை. எனவே, அவர்களுடைய உரிமை ஏதேனும் இருந்தால் அது காலாவதியாகிவிடும், மேலும் இந்த வழக்கும் காலவரையறைச் சட்டத்தால் தடைசெய்யப்படுகிறது.

13.15). உரிமையியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரை, உரிமைப் பத்திரத்தைத் தொடர்ந்து உடைமை வரும் என்பது சட்டத்தின் நிலைநிறுத்தப்பட்ட சட்ட நிலைப்பாடாகும். அந்தக் கொள்கையின்படி, பிரதிவாதிகள் வழக்குச் சொத்தின் 1 ம் அயிட்டத்திற்கு முழுமையான உரிமையாளர்கள் ஆவார்கள். ஏனெனில், UDR மற்றும் உரிமைப் பத்திரங்கள் உள்ளிட்ட வருவாய்ப் பதிவேடுகள் அனைத்தும் 1 ம் அயிட்ட சொத்தின் உரிமையைத் திட்டவட்டமாக நிறுவுகின்றன. வழக்குச் சொத்து 1966 ம் ஆண்டு முதல் பிரதிவாதிகள் மற்றும் அவர்களின் உரிமை முன்னோர்களிடமே இருந்து வருகிறது. 1963 ஆம் ஆண்டு சிறப்பு நிவாரணச் சட்டத்தின் பிரிவு 6-இன் கீழ் 6 மாதங்களுக்குள் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும், இல்லையெனில் காலவரையறை காரணமாக வழக்கு தோல்வியடையும். பிரதிவாதிகள் நல்லெண்ண அடிப்படையில் வாங்குபவர்கள். மூல ஆவணங்கள் மற்றும் வருவாய் பதிவேடுகள் மூலம் தங்கள் விற்பனையாளர்களின் உரிமை குறித்து அளந்து சொத்து வாங்கியுள்ளனர். எனவே, இந்த வழக்கைத் தாக்கல் செய்ய வாதிக்கு சட்டப்பூர்வ தகுதி இல்லை. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என வாதிடப்பட்டது.

**<u>14). எழுவினா 1 முதல் 3 க்கான தீர்வு :-</u>**

| | |
|---|---|
| **எழுவினா - 1** | Whether the plaintiffs are entitled to absolute owners of Item 1 of the suit property? |
| **எழுவினா - 2** | Whether the plaintiffs are entitled to recovery of possession? |
| **எழுவினா - 3** | Whether the plaintiffs are entitled to Permanent Injunction with respect of altering the physical features of the Item 1 of the suit property? |

**14.1). இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101-ன்படி தரப்பினர் எவர் ஒருவர் தனது சட்டப்படியான உரிமை அல்லது பொறுப்பு குறித்து தான் கூறும் சங்கதியை நீதிமன்றம் ஏற்று தீர்ப்பு வழங்கவேண்டும் என்ற சங்கதியை முன் வைக்கின்றாரோ,**

**அந்தநபரே அந்த சங்கதியை மெய்ப்பிக்கவேண்டியதாகும்.**

14.2). இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கு 1 மற்றும் 2 அயிட்ட சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதா? என்பதையும் தாவா 3ம் அயிட்ட சொத்தை பயன்படுத்த வாதிக்கு உரிமை உள்ளதா? என்பதையும் பரிசீலனை செய்ய வேண்டும்.

14.3). இரு தரப்பிலும், வாதி மற்றும் பிரதிவாதியின் சொத்து அருகருகே உள்ளது என்பதும், வாதிகளுடைய பூமிக்கு தென்புறமாக அரசுக்கு பாத்தியப்பட்ட மந்தை அமைந்துள்ளது. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமிக்கு வடபுறமும், கிழபுறமும் மேபுறமும் ஆகிய மூன்று புறங்களிலும் பிரதிவாதிகள் பூமி மட்டுமே அமைந்துள்ளது என்பதை ஒப்புக்கொண்டுள்ளனர். வாதிகள் கிரையம் பெற்றுள்ள க.ச.194 பு.ஏ.4.42 ½ பூமியானது க.ச.194-ன் தெற்கோடியில் அமைந்துள்ளது என்பது இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

14.4). வாதி தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள் மூலமாக வாதி தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை பரிசீலிக்க வேண்டும். வா.சா.ஆ.21 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் 29.04.1956 தேதியில் நடராஜன் என்பவருக்கு அரசூர் கிராம க.ச.எண்.194 நம்பர் காலையில் தென்புறமாக ஏக்கர் 5.42 ½ சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்பதை அறிய முடிகிறது. அதில் நடராஜன் அப்போது மைனராக இருந்ததால் அவருக்காக அவரது தாயார் ரங்கம்மாள் கிரையம் பெற்றுள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேற்படி நடராஜனிடமிருந்து வா.சா.ஆ.1, 24.08.1978 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலமாக 1ம் வாதியின் சகோதரர் பழனிசாமி மற்றும் 1ம் வாதி தெய்வசிகாமணி ஆகியோர்களுக்கு அரசூர் கிராம க.ச.எண்.194 நம்பர் காலையில் உள்ள ஏக்கர் 4.42 ½ சென்ட் சொத்து குறித்து கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்பதும், அதில் இந்த பூமியும் அதில் உள்ள மாவடை, மரவடை,

மாமூல் தடம் வகையறா சகிதம் எனக் குறிப்பிட்டு 1ம் வாதியும், அவரது சகோதரர் பழனிசாமியும் கிரையம் பெற்றுள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது.

14.5). வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் 09.01.2009 தேதியில் பழனிசாமி இறந்துவிட்டார் என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.18 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் பழனிசாமி கவுண்டர் எழுதி வைத்த உயில் ஆவணம் என்பதும், அவர் அவரது சொத்துக்கள் குறித்து அவரது மகனான 2ம் வாதி சுப்பிரமணியம் என்பவருக்கு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்பதும், அதில் வழக்கு சொத்து குறித்தும், இதர சொத்துக்கள் குறித்தும் உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்பதும், அதில் க.ச.எண்.194 ஏக்கர் 4.42 ½ பொதுவில் சரிபாதி 2.21 ¼ சொத்து குறித்து உயில் ஆவணம் ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. எனவே மேற்படி உயிலானது பழனிசாமியின் இறப்புக்கு பின்னிட்டு அமலுக்கு வந்து 2ம் வாதி மேற்படி சொத்தின் உரிமையாளர் என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் தெய்வசிகாமணி பெயரில் பட்டா பாஸ் புத்தகம் ஏற்பட்டுள்ளது என்பதும், அது பழைய புல எண்.194/6, 219/2B, 194/8, 219/5F, 223/1D சொத்து குறித்து பட்டா பாஸ் புத்தகம் ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

14.6). வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் பழனிசாமி கவுண்டர் பெயரில் புல எண்.194/5, 194/7, 219/2C, 219/5D, 223/1C சொத்து குறித்து தனி உரிமை பட்டா எண்.1249-ம், க.ச.எண்.218/2A, 218/2B சொத்து குறித்து கூட்டுரிமை பட்டா எண்.1136 ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் 1ம் வாதியின் சகோதரர் மற்றும் 2ம் வாதியின் தந்தை பழனிசாமி கவுண்டர் மற்றும் 1ம் வாதி தெய்வசிகாமணி பெயரில் புல எண்கள்.194/5, 194/7, 219/2D, 219/5D, 223/1C சொத்து குறித்து பட்டா எண்.1249 ம், புல எண்கள்.194/6, 194/8, 219/2B, 219/5F, 223/1D சொத்து குறித்து 1ம் வாதி தெய்வசிகாமணி பெயரில்

பட்டா எண்.536ம், புல எண்.194/9 முத்துசாமி, 1ம் வாதி தெய்வசிகாமணி, கே.பி.சி.கந்தசாமி, கே.பி.ஆர். டெவலப்பர்ஸ் லிமிடெட் பெயரில் பட்டா எண். 1146 ஏற்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது.

14.7). வா.சா.ஆ-6 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், புல எண்.194/9 முத்துசாமி, 1ம் வாதி தெய்வசிகாமணி, கே.பி.சி.கந்தசாமி, கே.பி.ஆர். டெவலப்பர்ஸ் லிமிடெட் பெயரில் பட்டா எண். 1146 ஏற்பட்டுள்ளது என்பதையும், பட்டா எண்.536-ஐ பரிசீலனை செய்கையில் அது 1ம் வாதி தெய்வசிகாமணி பெயரில் உள்ளது என்பதும், புல எண்.194/6, 194/8, 219/2B, 219/5F, 223/1D சொத்து குறித்து 1ம் வாதி பெயரில் சிட்டா ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேலும் பட்டா எண்.1249-ஐ பரிசீலனை செய்கையில், அது 1ம் வாதி தெய்வசிகாமணி பெயரிலும் அவரது சகோதரர் பழனிசாமி இறப்புக்கு பின்னிட்டு அவரது மகனான 2ம் வாதி சுப்பிரமணியம் பெயரில் ஏற்பட்டுள்ளது என்பதும், அதில் புல எண்.194/5, 194/7, 219/2 C, 219/2D, 219/5D, 223/1C சொத்து குறித்து ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.7 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், க.ச.எண்.194/6, 219/2B, 194/8, 219/5F, 223/1D சொத்து குறித்து 1ம் வாதி பெயரில் 1417 பசலி ஆண்டுக்குரிய அடங்கல் பதிவேடு ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

14.8). வா.சா.ஆ.8 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் பழனிசாமி பெயரில் க.ச.எண்.194/5, 194/7, 219/2C, 219/5D, 223/1C சொத்து குறித்து பசலி 1417ம் ஆண்டுக்குரிய அடங்கல் பதிவேடு ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.9 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் 1ம் வாதி மற்றும் பழனிசாமி பெயரில் உள்ள கிஸ்து ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.10 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் 1ம் வாதி சூலூர் காவல் நிலையத்தில் கே.பி.ஆர். பஞ்சாலை உரிமையாளர் சொத்தில் இடையூறு செய்தார் என்பது சம்பந்தமாக புகார் கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

வா.சா.ஆ.11 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், மேற்படி காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கான புகார் மனு ஏற்பு சான்றிதழ் என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.12 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 1ம் வாதி பல்லடம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குற்ற எண்.272/2007-ல் CMP மனு சம்பந்தமாக தாக்கல் செய்த ஆட்சேபணை குறிப்பு என்பதை அறிய முடிகிறது.

14.9). வா.சா.ஆ.13 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 1ம் வாதி தெய்வசிகாமணி, கே.பி.ராமசாமி, கே. பி. தெய்வசிகாமணி, பி. நடராஜ், பார்த்திபன், சுந்தரராமன், செல்வராஜ் ஆகியோர்கள் மீது பல்லடம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த C.C. No.245/2009-ன் புகார் என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.14 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், கோயம்புத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கே. பி. ஆர் காட்டன் மில்ஸ் நிறுவனமானது இந்த வழக்கின் வாதிகளான தெய்வசிகாமணி மற்றும் பழனிசாமி மீது தாக்கல் செய்த வழக்குரை என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.15 மற்றும் 16 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 1ம் பிரதிவாதி நிறுவனமானது 1ம் வாதி மற்றும் பழனிசாமி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி கோயம்புத்தூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.760/2007-ன் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை என்பதும், மேற்படி வழக்கானது தவறுகை காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டது என்பதை அறிய முடிகிறது.

14.10). வா.சா.ஆ.17 மற்றும் பி.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 07.07.2005 ம் தேதி 1ம் பிரதிவாதி கே. பி. ஆர். காட்டன் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனமானது 9 நபர்களிடமிருந்து மொத்தம் 22 அயிட்ட சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளனர் என்பதை அறிய முடிகிறது. அதில் க.ச.எண்.194/4 காலையில் ஏக்கர் 1.48 சென்ட்டையும், க.ச.எண்.194/9 நம்பர் காலையில் தென்வடல் கிழமேல் தடத்தையும், இதில் பொதுவில் 4/5 பங்கு சொத்தை கிரையம் பெற்றுள்ளார்

என்பதை அறிய முடிகிறது.

14.11). வா.சா.ஆ.19, 10.07.1975 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தை பரிசீலனை செய்கையில் ரங்கசாமி கவுண்டர் என்பவர் ரத்தினம் மற்றும் ஜெயபிரகாஷ் ஆகியோருக்கு சர்வே எண் 194 நம்பர் காலையில் ஏக்கர் 2.71 ¼ சென்ட் சொத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்தில் சொத்து விவரத்தில் ரங்கம்மாள் பூமிக்கும் வடக்கு, ரங்கம்மாள் பூமிக்கும் மேற்கு, கிருஷ்ணன் பூமிக்கும் கிழக்கு, சுப்பையா கவுண்டர் பூமிக்கும் தெற்கு இதன் மத்தியில் ஏக்கர் 2.71 ¼ சென்ட் தானம் கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேற்படி ரங்கம்மாள் என்பவர் வாதிகளின் கிரையதாரரான முன்னோரான நடராஜன் என்பவரின் தாயார் ஆவார்.

14.12). வா.சா.ஆ.20 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 29.03.1976 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் என்பதும், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் ரத்தினம் பெயரில் அரசூர் கிராம சர்வே எண்.195, 196, 197 சொத்துக்கள் குறித்து செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. மேற்படி ஆவணம் வழக்கு சொத்திற்கு சம்மந்தப்பட்ட ஆவணம் அல்ல. வழக்கு சர்வே எண்.194 சொத்திற்கு அருகில் உள்ள சொத்துக்கள் குறித்து ஏற்பட்ட ஆவணம் ஆகும்.

14.13). வா.சா.ஆ.22 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 21.08.1960 தேதியிட்ட பாகசாசனப் பத்திரம் என்பதும், அதில் சுப்பண்ண கவுண்டன் - 1, கொமாரசாமிக் கவுண்டன் - 2, முத்துசாமிக் கவுண்டன் - 3 ஆகியோர்களுக்குள் ஏற்பட்ட பாகபிரிவினை பத்திரம் என்பதும், அதில் சர்வே எண்.194 சொத்து குறித்து பாகபிரிவினை ஏற்பட்டுள்ளது என்பதையும் அதில் சர்வே எண். 194 காலையில் உள்ள தென்வடல் வண்டித்தடம் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது.

வா.சா.ஆ.23 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் சர்வே எண்.194/9 (3ம் அயிட்ட சொத்து) கூட்டு வண்டி பாதை என்பதும், அதன் உரிமையாளர்களாக கே. பி. ஆர் டெவலப்பர்ஸ் லிமிடெட், கே. பி. சி கந்தசாமி, 1ம் வாதி தெய்வசிகாமணி மற்றும் முத்துசாமி பெயரில் பட்டா எண்.1146 ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

14.14). பிரதிவாதி தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பி.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், மேற்படி கே. பி. ஆர். டெவலப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்காக பி. பாலசுப்பிரமணியம் என்பவருக்கு வழக்கு சம்பந்தமாக சாட்சியம் அளிக்கவும், ஆவணங்கள் தாக்கல் செய்யவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேற்படி பாலசுப்பிரமணியன் இந்த வழக்கில் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பி.சா.ஆ.2 ஆக பாலசுப்பிரமணியம் அடையாள அட்டை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் கே. பி. ஆர் மில் லிமிடெட் நிறுவனத்தின் டாக்குமெண்ட் ஆபிஸராக பணிபுரிகிறார் என்பதை அறிய முடிகிறது. பி.சா.ஆ.3, 07.07.2005 தேதியிட்ட கிரைய ஆவணமானது வாதி தரப்பில் வா.சா.ஆ.17 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

14.15). பி.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் 19.01.2006 தேதியில் தெய்வசிகாமணி மற்றும் நடராஜ் ஆகியோர்களின் பவர் ஏஜென்ட்டான பி.ராமசாமிக்கு கே. பி. ஆர். காட்டன் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்காக மேற்படி நிறுவனத்தின் இயக்குனரும் பழனிசாமி குமாரருமான கே. பி. ராமசாமி எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் என்பதும், அதில் அரசூர் கிராம புல எண்.194/2, 194/3, 194/4, 194/13, 194/14, 194/15, 195/1, 195/2, 195/3, 196/3, 197/6 ஆகிய சர்வே எண்ணில் கண்ட சொத்துக்கள் குறித்து கிரையப் பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. இதில் வழக்கு 1ம் அயிட்ட சொத்தான (சர்வே எண்.194/4), மற்றும் அதற்கு அருகில் உள்ள சொத்துக்களான சர்வே எண்.194/3 மற்றும் இதர சொத்துக்கள் குறித்து கிரையப் பத்திரம் ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

14.16). பி.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் 21.02.2006 தேதியில் கே. பி. ராமசாமி, கே. பி. தெய்வசிகாமணி, நடராஜ் ஆகியோர்களின் பொது அதிகார முகவரான சி.ஆர். ஆனந்த கிருஷ்ணன் அவர்கள் முத்துசாமி கவுண்டர், சின்னசாமி, பொன்னுசாமி, ரங்கசாமி, தினேஷ்குமார், கோபாலகிருஷ்ணன் ஆகியோரிடம் இருந்து அரசூர் கிராமம் க.ச.எண்.194/1, 194/12, 196/1, 197/3, 197/4 (1ம் அயிட்ட சொத்து) 194/9 (3ம் அயிட்ட சொத்து) இதில் பொதுவில் 1/5 பங்கு, 194/10, 197/1 ஆகிய காலைகளில் கண்ட சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்பதை அறிய முடிகிறது. பி.சா.ஆ.6 பல்லடம் தாசில்தார் வழங்கிய சான்றிதழை பரிசீலனை செய்கையில், அதில் கே.பி. ஆர் டெவலப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு சொந்தமான சர்வே எண்கள் குறித்து சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்பதும், அதில் மொத்தம் 50 ஏக்கர் 45.30 சென்ட் குறித்து சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்பதையும், அதில் வழக்கு புல எண்.194/1, 194/2, 194/3, 194/4(1ம் அயிட்ட சொத்து), 194/9 (3ம் அயிட்ட சொத்து), 194/10, 194/11, 194/12, 194/13, 194/14, 194/15 ஆகிய சொத்துக்கள் குறித்து சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

14.17). பி.சா.ஆ.7 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், பழைய புல எண்.194/1, க்கான கூட்டு பட்டா என்பதும், அது கே. பி. ஆர். டெவெலப்பர் லிமிடெட் மற்றும் இதர 5 நபர்கள் பெயரில் உள்ளது என்பதையும், புல எண்.194/2, 194/3, 194/4 ஆகிய சொத்துக்கள் கே.பி.சி.கந்தசாமி மற்றும் கே.பி.ஆர். டெவலப்பர்ஸ் லிமிடெட் பெயரில் உள்ளது என்பதையும், புல எண்.194/10 முத்துசாமி கவுண்டர், கே.பி.சி.கந்தசாமி மற்றும் கே.பி.ஆர். டெவலப்பர்ஸ் லிமிடெட் பெயரில் உள்ளது என்பதையும், புல எண்.194/11, 196/2, 197/2, 197/5, 197/9 ஆகியவை கே.பி.ஆர். டெவலப்பர்ஸ் பெயரிலும், புல எண்.194/12, முத்துசாமி கவுண்டர், கே.பி.சி. கந்தசாமி, சின்னச்சாமி, பொன்னுசாமி, ரங்கசாமி, கே.பி.ஆர். டெவலப்பர்ஸ் லிமிடெட் பெயரிலும், புல எண்.194/13, 194/14, 194/15 ஆகிய சொத்துக்கள் கே.பி.சி. கந்தசாமி மற்றும் கே.பி.ஆர்.

டெவலப்பர்ஸ் லிமிடெட் பெயரில் உள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

14.18). பி.சா.ஆ.8 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், புல எண்.194/1-க்கான அ - பதிவேடு என்பதும், அது முத்துசாமி கவுண்டர் மற்றும் 5 நபர்கள் பெயரிலும் புல எண்.194/2, 194/3, 194/4 (1 ம் அயிட்ட சொத்து), 194/13, 194/14, 194/15-க்கான அ-பதிவேடு கே. பி. சி. கந்தசாமி, கே. பி. ஆர். டெவலப்பர் லிமிடெட் பெயரில் உள்ளது என்பதை அறிய முடிகிறது. புல எண்.194/9 (3 ம் அயிட்ட சொத்து) முத்துசாமி மற்றும் மூன்று பேர் பெயரில் உள்ளது என்பதும், புல எண்.194/10 முத்துசாமி கவுண்டர் பெயரில் உள்ளது என்பதும், புல எண்.194/11, கே. பி. ஆர். டெவலப்பர்ஸ் பெயரிலும், புல எண்.194/12 முத்துசாமி கவுண்டர் மற்றும் 5 பேர் பெயரில் உள்ளது என்பதும் அறிய முடிகிறது.

14.19). பி.சா.ஆ.9 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 29.04.1956 தேதியில் பழனிசாமி கவுண்டர் அவர்கள் ரங்கசாமி ஆசாரியிடம் இருந்து பெற்ற கிரைய பத்திரம் என்பதும், அதில் அரசூர் கிராம சர்வே எண்.194 நம்பர் காலையில் உள்ள கிழமேல் பொலியில் சரிபாதி வடபுறம் ஏக்கர் 4.42 ½ சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்பதை அறிய முடிகிறது. பி.சா.ஆ.10, 31.08.1966 தேதியிட்ட கிரைய ஆவணத்தை பரிசீலனை செய்கையில், ரங்கசாமி கவுண்டர் அதில் சர்வே எண்.194 நம்பர் காலையில் ஏக்கர் 2.71 ¼ சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்பதை அறிய முடிகிறது. பி.சா.ஆ.11 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், பி.சா.ஆ.10 ஆவணம் மூலம் பெற்ற சொத்துக்களை ரங்கசாமி கவுண்டர் 10.07.1975 தேதியில் ஏற்படுத்தப்பட்ட தானம் செட்டில்மெண்ட் பத்திரம் என்பதும், அதில் ரத்தினம் மற்றும் ஜெயப்பிரகாஷ் ஆகியோருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தியுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

14.20). பி.சா.ஆ.12 மற்றும் 13 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் பழைய புல எண்.194 காண RSR பதிவேடு என்பதையும், அதில் புல எண்.194/1 காலை முத்துசாமி கவுண்டர் பெயரிலும் புல எண்.194/2 குமாரசாமி கவுண்டர் பெயரிலும், புல எண்.194/3 நஞ்சப்ப கவுண்டர் பெயரிலும், புல எண்.194/4 (1 ம் அயிட்ட சொத்து) மைனர் ஜெயப்பிரகாசம், ரத்தினம் பெயரிலும், புல எண்.194/5 மா.பழனிசாமி கவுண்டர் பெயரிலும், புல எண்.194/6 மா.தெய்வசிகாமணி பெயரிலும், புல எண்.194/7 மா. பழனிசாமி கவுண்டர் பெயரிலும், புல எண்.194/8 மா. தெய்வசிகாமணி பெயர்களிலும், புல எண்.194/9 (3 ம் அயிட்ட சொத்து) முத்துசாமி கவுண்டர் மற்றும் 6 பேர் பெயர்களிலும், புல எண்.194/10 முத்துசாமி கவுண்டர், குமாரசாமி கவுண்டர் பெயரிலும் புல எண்.194/11 குமாரசாமி கவுண்டர் பெயரிலும், புல எண்.194/12 முத்துசாமி கவுண்டர் பெயரிலும், புல எண்.194/13 ரங்கம்மாள் பெயரிலும், புல எண்.194/14 ரங்காத்தாள், ஜெயபிரகாசன், கார்டியன் தாயார் S.ரத்தினம் பெயரிலும், புல எண்.194/15 மைனர் ஜெயப்பிரகாசன், ராஜப்பன் கார்டியன் தாயார் மனைவி S.ரத்தினம் பெயரிலும் உள்ளது என்பதை அறிய முடிகிறது.

14.21). பி.சா.ஆ.14 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், அது அரசூர் கிராம புல எண்.194 க்கான புல வரைபடம் என்பதும், அதில் வாதி, பிரதிவாதிகளின் சொத்துக்கள் காணப்படுகிறது. மேலும் அதில் சர்வே எண்.194/9 (3 ம் அயிட்ட சொத்து) என்பது பாதையாக காட்டப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. பி.சா.ஆ.15 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் சர்வே எண்.194/9 (3 ம் அயிட்ட சொத்து) கூட்டு வண்டி பாதையாக காட்டப்பட்டுள்ளது. அது கே. பி. ஆர் டெவலப்பர்ஸ் லிமிடெட் மற்றும் கே. பி. சி. கந்தசாமி, 1 ம் வாதி தெய்வசிகாமணி மற்றும் முத்துசாமி பெயரில் உள்ளது என்பதை அறிய முடிகிறது. பி.சா.ஆ.16 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், அரசூர் கிராம சர்வே எண்.194/1A, 1B, 1C, 194/2A, 2B, 2C, 194/3, 194/4 (1 ம் அயிட்ட சொத்து) சொத்துக்கள் குறித்து கே. பி. ஆர் டெவலப்பர்ஸ் பெயரிலும், சர்வே

எண்.194/5 குறித்து தெய்வசிகாமணி பெயரிலும், சர்வே எண்.194/6 குறித்து சண்முகசுந்தரம் பெயரிலும், சர்வே எண்.194/7 குறித்து மகேஸ்வரி பெயரிலும், சர்வே எண்.194/8 குறித்து ராஜாமணி வகையறா பெயரிலும், சர்வே எண்.194/9 (3 ம் அயிட்ட சொத்து) குறித்து முத்துசாமி வகையறா பெயரிலும், சர்வே எண்.194/10 முத்துசாமி கவுண்டர் வகையறா பெயர்களும், சர்வே எண்.194/11 குறித்து கே.பி.ஆர் டெவலப்பர்ஸ் லிமிடெட் பெயரிலும், சர்வே எண்.194/12 முத்துசாமி கவுண்டர் வகையறா பெயரிலும், சர்வே எண்கள்.194/13, 194/14, 194/15, கே. பி. ஆர். டெவெலப்பர் லிமிடெட் பெயரிலும் பசலி ஆண்டு 1434-க்கு அடங்கல் ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

14.22). நீ.ம.சா.ஆ.1 முதல் 3 நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை பரிசீலனைச் செய்கையில், வழக்கு 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களின் சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. 1-ம் அயிட்ட சொத்து சர்வே எண் 194/4, 2-ம் அயிட்ட சொத்து சர்வே எண்கள் .194/5, 6, 7, 8 ஆகவும், 3- ம் அயிட்ட சொத்து சர்வே எண் 194/9 ஆகவும் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையர் வாதி சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்பதும், அதில் சர்வே எண்.194/5, 6, 7, 8 சொத்துக்கள் வாதியின் அனுபவத்தில் உள்ள சொத்துக்கள் என்றும், சர்வே எண்.194/4-ல் உள்ள 0.64 ½ சொத்துக்கள் பிரதிவாதியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக கூறப்படும் பகுதியையும் அறிக்கை, வரைபடம் மற்றும் சர்வேயர் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அதில் சர்வே எண்.194/5 ல் ஏ.1.26 ம், சர்வே எண்.194/6 ல் ஏ.1.19 ம், சர்வே எண்.194/7 ல் ஏ.0.64 ம், சர்வே எண்.194/8 ல் ஏ.0.69 ம் மொத்தம் 3.78 ஏக்கர் உள்ளது. அது வழக்கு 2 ம் அயிட்ட சொத்து. 2 ம் அயிட்ட சொத்து பச்சை வர்ணத்தில் காட்டப்பட்டுள்ளது. சர்வே எண்.194/4 ல் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக கூறும் சொத்தின் விஸ்தீரணம் ஏ.0.64 ½ ஆகும். மேற்படி சொத்தை சேர்த்து தான் ஏ.4.42 ½ வாதி கிரையம் பெற்று சொத்து ஏ.4.42 ½ உள்ளது என சொல்லப்பட்டுள்ளது.

14.23). பி.சா.3 கிராம நிர்வாக அலுவலர் சுரேஷ்பாபு அவர்கள் தனது சாட்சியத்தில் "UDR படி புல எண்.194/4 பொறுத்து தற்போது வரை மைனர் ஜெயப்பிரகாசம் மற்றும் ரத்தினம் ஆகியோர் பெயர்களில் உள்ளது என்றால் சரிதான். தற்போது பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் கே. பி. ஆர் டெவலப்பர்ஸ் லிமிடெட் பெயரில் பட்டா எண்.1363 உள்ளது" என சாட்சியம் அளித்துள்ளார். பி.சா.ஆ.7 ஆவணத்தில் புல எண்.194/4 காலையில் கணினி சிட்டா கே. பி. சி. கந்தசாமி மற்றும் கே. பி. ஆர். டெவலப்பர்ஸ் லிமிடெட் பெயரில் உள்ளது. புல எண்.194/9 என்பது கூட்டு வண்டித்தடம் என குறிப்பிடப்பட்டுள்ளது. புல எண்.194/4 உட்பிரிவானது புல எண்கள்.194/5, 6, 7, 8 காலையில் வடபுறம் உள்ளது என்றால் சரிதான். இப்பொழுது 194/4 தற்சமயம் சிட்டா படியும், அடங்கல் படியும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான்" என சாட்சியமளித்துள்ளார்.

14.24). பி.சா.3 குறுக்கு விசாரணையின் போது "பழைய புல எண்.194/4 காலையில் பரப்பளவு எவ்வளவு என்றால் ஏக்கர் 1.48 சென்ட் ஆகும். நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பட்டா வழங்கும்போது ரத்தினம் மற்றும் ஜெயப்பிரகாசம் உரிமையாளர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண்.194/9 என்பது கூட்டு வண்டிப்பாதை என்றால் சரிதான். புல எண்.194/9 காலையானது முத்துசாமி கவுண்டர், குமாரசாமி கவுண்டர், மைனர் ஜெயப்பிரகாசம், காப்பாளர் மற்றும் தாயார் ரத்தினம், மாரப்ப கவுண்டர் மக்கள் தெய்வசிகாமணி, பழனிசாமி கவுண்டர், ராமாத்தாள் ஆகியோர்கள் பெயரில் கூட்டாக உள்ளது. தற்போது நிகழ்நிலையில் பழைய புல எண்.194/9 என்பது வண்டிப்பாதையாக உள்ளது என்றால் இல்லை. பிரதிவாதிகள் அவர்களது நிலத்துடன் சேர்த்து வண்டிப்பாதையையும் சேர்த்து வேலி அமைத்துள்ளார்கள் என்றால் சரிதான்" என சாட்சியமளித்துள்ளார்.

14.25). மேற்படி பி.சா.3 சாட்சியத்தில் இருந்து UDR படி புல எண்.194/4 பொறுத்து தற்போது வரை மைனர் ஜெயப்பிரகாசம் மற்றும் ரத்தினம் ஆகியோர்

பெயர்களில் உள்ளது என்பதும், தற்போது கே. பி. ஆர் டெவலப்பர்ஸ் லிமிடெட் பெயரில் பட்டா எண்.1363 உள்ளது என்பதும், பி.சா.ஆ.7 ஆவணத்தில் புல எண்.194/4 காலையில் கணினி சிட்டா கே. பி. சி. கந்தசாமி மற்றும் கே. பி. ஆர். டெவலப்பர்ஸ் லிமிடெட் பெயரில் உள்ளது என்பதும் அறியமுடிகிறது. புல எண்.194/9 என்பது கூட்டி வண்டிப்பாதை என்பதும், அதில் 1ம் வாதி மற்றும் 2ம் வாதியின் தகப்பனார் பெயரும், இதர நபர்கள் பெயரும் கூட்டாக உள்ளது என்பதும், அது நிகழ் நிலையில் வண்டிப்பாதையாக இல்லை என்பதும், பிரதிவாதிகள் அவர்கள் நிலத்துடன் சேர்த்து வண்டிப்பாதையில் சேர்த்து வேலி அமைத்துள்ளார் என்பதும் நிரூபணமாகிறது.

14.26). மேலும் பி.சா.3 குறுக்கு விசாரணையில் "கூட்டு வண்டிப்பாதை கொள்ளுபாளையத்தில் தொடங்கி தென்வடலாக தாவா சொத்திற்கு பின்புறம் உள்ள க.ச.206 ல் குட்டையை தாண்டி ரோட்டிற்கு வருகிறது என்றால் கொள்ளுபாளையத்திலிருந்து தென்வடலாக க.ச.எண்.206 வரை பாதை உள்ளது. க.ச.எண்.206 வழியாக பாதை இல்லை. மேற்படி சாட்சியத்தில் இருந்து கொள்ளுபாளையத்திலிருந்து தென்வடலாக க.ச.எண்.206 வரை பாதை உள்ளது என்பதை அறியமுடிகிறது.

14.27). 10.07.1975 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தில், ஜெயபிரகாஷ் மற்றும் ரத்தினத்திற்கு கச.எண்.194 நெம்பர் காலை ரங்கம்மாள் பூமிக்கும் வடக்கு, ரங்கம்மாள் பூமிக்கு மேற்கு, கிருஷ்ணன் பூமிக்கும் கிழக்கு, சுப்பையா கவுண்டர் பூமிக்கும் தெற்கு இதன் மத்தியில் 2.71 ¼ பூமியைத்தான் எழுதிக் கொடுத்துள்ளார். கடந்த 07.07.2005 தேதியிட்ட பிரதிவாதிகளின் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தில் சொத்து விவரத்தில் க.ச.194/4 நெம்பர் காலையில் பு.ஏ 1.48-ம், க.ச.194/9 காலையில் பு.ஏ. 0.47-2/10-ம், க.ச.194/14 காலையில் பு.ஏ.0.20-ம், க.ச.194/15 காலையில் பு.ஏ.1.16 ம் ஆக ஒட்டு பு.ஏ.3.33 பூமியை கிரையம் செய்து கொடுத்துள்ளார். "அதாவது 10.07.1975 செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் ஜெயப்பிரகாஷ், ரத்தினம் ஆகியோர்களுக்கு

பாத்தியப்பட்ட க.ச.எண் 194 ஆம் நெம்பர் காலையில் பு.ஏ.2.71 ¼ பூமியை விட கூடுதலாக குறிப்பாக 63 செண்ட் பூமி கூடுதலாக பு.ஏ.3.33 பூமியை கிரையம் செய்து கொடுத்துள்ளனர். அவ்வாறு கூடுதலாக கிரையம் செய்து கொடுத்த பு.ஏ.0.63 மேற்படி ஜெயபிரகாஷ் ரத்தினம் ஆகியோர்களுக்கு எப்படி பாத்தியப்பட்டது" என்ற எந்த விவரமும் 07.07.2005 தேதியிட்ட கிரைய பத்திரத்தில் இல்லை. வருவாய்த்துறை பதிவேடுகளின் படி பாத்தியப்பட்ட சொத்தை கிரையம் செய்து கொடுப்பதாக எந்த ஒரு வாசகமும் இல்லை.

14.28). வா.சா.ஆ.1 24.08.1977-ல் வாதிகள் நடராஜ் என்பவரிடமிருந்து தான் தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களான பு.ஏ.4.42 ½ -ஐ கிரையம் பெற்றுள்ளார். மேற்படி நடராஜ் என்பவருக்கு 29.04.1956-ம் தேதியிட்ட கிரைய பத்திரப்படி க.ச.194 நெம்பர் காலையில் பு.ஏ.5.42 ½ பூமி பாத்தியப்பட்டுள்ளது. அவ்வாறு பாத்தியப்பட்ட பு.ஏ.5.42 ½-ல் பு.ஏ.4.42 ½ வாதிகளுக்கு கடந்த 24.08.1977 ல் கிரையம் செய்து கொடுத்துள்ளார். ஆதலால் மேற்படி நடராஜனுக்கு க.ச.194-ல் மீதமுள்ளது பு.ஏ.1.00 மட்டுமே. இவ்வாறான சூழ்நிலையில் பிரதிவாதிகள் மேற்படி நடராஜனிடம் இருந்து பு.ஏ.1.21 க.ச.எண்.194/13 என்ற உட்பிரிவின் கீழ் கிரையம் பெற்றதாக 07.07.2005-ல் கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளனர். மேற்படி நடராஜரனுக்கு 1.00 ஏக்கர் மட்டுமே பாத்தியமிருக்கின்ற நிலையில் எந்த அடிப்படையில் பு.ஏ.1.21 பூமியை கிரையம் பெற்றனர் என்பது குறித்து எந்த விளக்கமும் இல்லை. 07.07.2005-ல் கிரையம் கொடுத்தவர்களான 1-இலக்கமிட்ட நடராஜ் மற்றும் 6-இலக்கமிட்ட ஜெயப்பிரகாஷ் 7-லக்கமிட்ட ரத்தினம் ஆகியோர்களை இந்த வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை.

14.29). பிரதிவாதிகள் நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அவர்களது கிரைய முன்னோர்களுக்கு பட்டா கொடுத்திருப்பதாகவும், அந்த பட்டாவின் அடிப்படையில் கிரையம் பெற்றதாகவும், பி.சா.1 நீதிமன்றத்தில் சாட்சியம்

அளித்துள்ளார். 07.07.2005 தேதியிட்ட கிரைய பத்திரத்தில் எந்த ஒரு கிரைய முன்னோரும் தனக்கு நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் படி வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் கிரையம் செய்து கொடுப்பதாக குறிப்பிடவில்லை. எனவே, பிரதிவாதிகள் நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அவர்களது கிரைய முன்னோர்களுக்கு பட்டா கொடுத்திருப்பதாகவும், அந்த பட்டாவின் அடிப்படையில் கிரையம் பெற்றதாக கூறுவது ஏற்புடையதல்ல.

14.30). பி.சா.1 முதல் விசாரணையில் " தற்சமயம் நாங்கள் எங்களது வழக்கை பற்றி தற்போதைய வழக்கறிஞரிடம் ஆவணங்களைக் கொடுத்து பரிசீலனை செய்தவகையில் தாவா 1வது இனச் சொத்தானது க.ச.எண்.194/4 உட்பிரிவிற்குள் வருகின்றது என ஊர்ஜிதப்படுத்திக் கொண்டோம்" என பிரதிவாதியே தாவா 1வது இனச் சொத்தானது க.ச.எண்.194/4 உட்பிரிவிற்குள் வருகின்றது ஒப்புக்கொண்டுள்ளனர்.

14.31). பி.சா.1 குறுக்கு விசாரணையில், வா.சா.ஆ.23 சிட்டா ஆவணத்தில் வழக்கின் 1ம் வாதி தெய்வசிகாமணி பெயர் குறிப்பிடப்பட்டுள்து என்றால் சரிதான். க.ச.எண்.194/9 என்பது கூட்டு வண்டித்தடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால், UDR ல் கூட்டு வண்டித்தடம் என்று குறிப்பிடவில்லை என சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.ஆ.23 சிட்டா ஆவணத்தில் க.ச.எண்.194/9 என்பது கூட்டு வண்டித்தடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும், ஆனால், UDR ல் கூட்டு வண்டித்தடம் என்று குறிப்பிடவில்லை என்பதை அறிய முடிகிறது.

14.32). பி.சா.1 குறுக்கு விசாரணையில், பி.சா.ஆ.3 ஆவண சொத்து விவரத்தில் க.ச.எண்.194/4 காலையில் புஞ்சை ஏக்கர் 1.48, 194/15 காலையில் பு.ஏ.1.16, க.ச.எண்.194/9 காலையில் பு.ஏ.0.47 2/10 என்றும், க.ச.எண்.194/14 காலையில் பு.ஏ.0.20 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பூமிகளுக்கு

செக்குபந்திகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் என சாட்சியம் அளித்துள்ளார். பி.சா.ஆ.3 ஆவண சொத்து விவரத்தில் பூமிகளுக்கு செக்குபந்திகள் குறிப்பிடவில்லை என்பதை அறிய முடிகிறது.

14.33). பி.சா.1 குறுக்கு விசாரணையில், பி.சா.ஆ.12 UDR ஆவணத்தில், 12 காலங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. பி.சா.ஆ.12 UDR ஆவணத்தின் முதல் பக்கத்தில், 11 காலம் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.12 ஆவணத்தில் முதல் பக்கத்தில் 12 வது காலம் விடுபட்டுள்ளது என்றால் சரிதான் என சாட்சியம் அளித்துள்ளார். எனவே, பி.சா.ஆ.12 UDR ஆவணம் முழுமையான ஆவணம் அல்ல என்பதை அறியமுடிகிறது.

14.34). பி.சா.1 குறுக்கு விசாரணையில் கே.பி.ஆர். டெவலப்பர்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம் தான் இந்த வழக்கு நடத்த எனக்கு அதிகாரம் கொடுத்துள்ளது. 1ம் பிரதிவாதி நிறுவனம் எனக்கு அதிகாரம் அளிக்கவில்லை என்றால் சரிதான். தற்பொழுது அந்த நிறுவனம் செயல்பாட்டில் இல்லை. 1ம் பிரதிவாதி நிறுவனத்தை கே.பி.ஆர். மில் டெவலப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்துடன் இணைத்து விட்டோம். நான்கு நிறுவனமாக இருந்ததை ஒரே நிறுவனமாக மாற்றிவிட்டோம் என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தில் இருந்து 1ம் பிரதிவாதி நிறுவனத்தை கே.பி.ஆர். மில் டெவலப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்துடன் இணைத்து விட்டனர் என்பதை அறியமுடிகிறது. கே.பி.ஆர். டெவலப்பர்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம் பி,சா.1 க்கு இந்த வழக்கு நடத்த அதிகாரம் கொடுத்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

14.35). பி.சா.1 குறுக்கு விசாரணையில் வாதிகளுடைய வழக்கு 2ம் அயிட்ட சொத்திற்கு வடபுறமாக உள்ள 0.64 ½ ஏக்கர் பூமியை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்து கம்பிவேலி அமைத்துள்ளதால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தில் இருந்து

வாதிகளுடைய வழக்கு 2ம் அயிட்ட சொத்திற்கு வடபுறமாக உள்ள 0.64 ½ ஏக்கர் பூமியை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்து கம்பிவேலி அமைத்துள்ளதால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என ஒப்புக்கொண்டுள்ளனர்.

14.36). மேலும் 07.07.2005 கிரைய பத்திரத்தில் சொத்து விவரத்தில் செக்கு பந்தி குறிப்பிட்டு காட்டப்படவில்லை. எனவே செக்குபந்தி குறிப்பிட்டு காட்டப்படாத நிலையில், மேற்படி சொத்தின் புல எண்ணின் எல்லைகளை நிர்ணயம் செய்ய இயலாது. பிரதிவாதிகள் தரப்பில் வழக்கு சொத்துக்கான பட்டா தாக்கல் செய்துள்ள போதும், பட்டா என்பது வழக்கின் உரிமை மூலத்தை நிரூபிக்கக்கூடிய ஆவணம் அல்ல.

14.37). மேற்கண்ட பரிசீலனைகளில் இருந்து தாவா சொத்துக்கள் வா.சா.ஆ.21 ஆவணம் மூலமாக நடராஜ் என்பவருக்கு 29.04.1956 தேதியிட்ட கிரையப் பத்திரப்படி அரசூர் கிராமம் க.ச.எண்.194 நம்பர் காலையில் தென்புறமாக பு.ஏ.5.42 ½ பாத்தியப்பட்டது ஆகும். பின்னிட்டு நடராஜன் அவர் கிரையம் பெற்ற சொத்தில் ஒரு பகுதியான பு.ஏ.4.42 ½ சொத்தை 24.08.1977 தேதியிட்ட வா.சா.ஆ.1 கிரையப் பத்திரப்படி 1ம் வாதி தெய்வசிகாமணி மற்றும் 2ம் வாதியின் தகப்பனாரான பழனிச்சாமிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்பது நிரூபணமாகிறது. 07.07.2005 பி.சா.ஆ.3 கிரைய பத்திரத்தை பரிசீலனை செய்கையில் சர்வே எண்.194/4 நம்பர் காலையில் பு.ஏ.1.48 நிலமானது 6 மற்றும் 7 லக்கமிட்டவர்களான ஜெயப்பிரகாஷ் மற்றும் ரத்தினம் ஆகியவர்கள் கிரையம் பெற்றுள்ளனர்.

14.38). வா.சா.ஆ.19, 10.07.1975 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தை பரிசீலனை செய்கையில் ரங்கசாமி கவுண்டர் அவர்கள், ரத்தினம் மற்றும் ஜெயபிரகாஷ் ஆகியோருக்கு சர்வே எண் 194 நம்பர் காலையில் ஏக்கர் 2.71 ¼ சென்ட் சொத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேற்படி

செட்டில்மெண்ட் பத்திரத்தில் சொத்து விவரத்தில் ரங்கம்மாள் பூமிக்கும் வடக்கு, ரங்கம்மாள் பூமிக்கும் மேற்கு, கிருஷ்ணன் பூமிக்கும் கிழக்கு, சுப்பையா கவுண்டர் பூமிக்கும் தெற்கு இதன் மத்தியில் ஏக்கர் 2.71 ¼ சென்ட் தானம் கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேற்படி ரங்கம்மாள் என்பவர் வாதிகளின் கிரையதாரரான முன்னோரான நடராஜன் என்பவரின் தாயார் ஆவார். பி.சா.ஆ.3, 07.07.2005 தேதியிட்ட கிரையப் பத்திரத்தை பரிசீலனை செய்கையில் சர்வே எண்.194/4 நம்பர் காலையில் பு.ஏ.1.48-ம், சர்வே எண்.194/9 காலையில் பு.ஏ.0.47 2/10 ம், சர்வே எண்.194/14 காலையில் பு.ஏ.0.20 ம், சர்வே எண்.194/15 காலையில் பு.ஏ.1.16 ஆக மொத்தம் புஞ்சை ஏக்கர் 3.33 சென்ட் கிரையம் கொடுத்துள்ளது தெரிய வருகிறது.

14.39). வா.சா.ஆ.19 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 10.07.1975 தேதியிட்ட செட்டில்மெண்ட் மூலம் ஜெயப்பிரகாஷ் மற்றும் ரத்தினம் ஆகியோர்களுக்கு சர்வே எண்.194 நம்பர் காலையில் ஏக்கர் 2.71 ¼ பூமி பாத்தியப்பட்டதாகும் என்பதை அறியமுடிகிறது. 10.07.1975 செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் ஜெயப்பிரகாஷ் மற்றும் ரத்தினம் ஆகியோர்களுக்கு சர்வே எண்.194 நம்பர் காலையில் ஏக்கர் 2.71 பூமியானது செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்பட்ட நிலையில், அதை விட கூடுதலாக 63 சென்ட் சேர்த்து ஏக்கர் 3.33 சென்ட் பூமி கிரையம் கொடுத்துள்ளனர்.

14.40). அவ்வாறு கூடுதலாக கிரையம் கொடுத்துள்ள புஞ்சை 0.63 சென்ட் ஜெயப்பிரகாஷ் மற்றும் ரத்தினம் ஆகியோர்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது? என்பது சம்பந்தமாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எனவே 10.07.1975 செட்டில்மெண்ட் பத்திரம் மூலமாக பாத்தியப்பட்ட சொத்தை விட ஜெயப்பிரகாஷ் மற்றும் ரத்தினம் ஆகியோர் கூடுதலாக 63 சென்ட் விஸ்தீர்ணம் கிரையம் கொடுத்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது. பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தவருக்கு ஏக்கர் 2.71 ¼ சென்ட் பாத்தியப்பட்ட நிலையில், அவருக்கு

பாத்தியம் இல்லாத 0.63 சென்ட் குறித்து கிரைய பத்திரம் ஏற்பட்டுள்ளது. கிரையம் கொடுத்தவர்களுக்கே கூடுதலாக உள்ள 0.63 சென்ட் சொத்தில் உரிமை இல்லாத நிலையில், அதை வாங்கிய பிரதிவாதிக்கும் மேற்படி 0.63 சென்ட் சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை.

14.41). வாதிகள் நடராஜ் என்பவரிடமிருந்து வா.சா.ஆ.1, 24.08.1978 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலமாக பு.ஏ.4.42 ½ சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார்கள். 29.04.1956 தேதியிட்ட கிரைய பத்திரப்படி சர்வே எண்.194 நம்பர் காலையில் புஞ்சை ஏக்கர் 5.42 பூமி பாத்தியப்பட்டது. அதில் வாதிக்கு 24.08.1977 தேதியில் புஞ்சை ஏக்கர் 5.42 ½ சென்ட், புஞ்சை ஏக்கர் 4.42 ½ சென்ட்டை வாதிகளுக்கு கிரயம் கொடுத்துள்ளார்.

14.42). மேற்படி நடராஜனுக்கு சர்வே எண்.194 நம்பர் காலையில் புஞ்சை ஏக்கர் 1.00 மட்டுமே பாத்தியமான நிலையில், பிரதிவாதிகள் நடராஜனிடமிருந்து புஞ்சை ஏக்கர் 1.21 சர்வே எண்.194/13 கிரையம் பெற்றதாக 07.07.2005 தேதியிட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நடராஜனுக்கு ஒரு ஏக்கர் மட்டுமே பாத்தியப்பட்டுள்ள நிலையில், பி.சா.ஆ.3 ஆவணம் மூலமாக 7 ம் அயிட்ட சொத்தாக கூடுதலாக 0.21 சென்ட் சேர்த்து புஞ்சை ஏக்கர் 1.21 கிரையம் கொடுத்துள்ளார். அவ்வாறு நடராஜனுக்கு கூடுதலாக 0.21 சென்ட் உரிமை இல்லாத நிலையில், அதை வாங்கியவருக்கும் பிரதிவாதிக்கு கூடுதலாக உள்ள 0.21 சென்ட்டில் எவ்வித உரிமையும் இல்லை. அவ்வாறு தனக்கு பாத்தியப்பட்டதை விட கூடுதல் விஸ்தீர்ணத்தை குறித்து கிரையம் கொடுக்கப்பட்டுள்ள நிலையில், அது அவர்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பது குறித்து நடராஜ், ஜெயபிரகாஷ், ரத்தினம் ஆகியோர்களுக்கு உண்டான ஆவணம் எதுவும் பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும் பிரதிவாதியே சர்வே எண்.194/4 என்பது வழக்கு 1-ம் அயிட்ட சொத்தின் ஒரு பகுதி என ஒப்புக்கொண்டுள்ளார்.

14.43). பிரதிவாதி தரப்பில் 2002-ம் ஆண்டிலேயே வழங்கப்பட்ட ஆவணங்கள் வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 சர்வே எண்.194-ன் உட்பிரிவு எண்கள் உள்ள நிலையில் உட்பிரிவு எண்களைக் குறிப்பிடவில்லை. வாதிகள் வழக்குரையை திருத்தி, அந்த உட்பிரிவு எண்களைச் சேர்க்கவில்லை என்ற வாதம் முன்வைக்கப்பட்டது. வழக்கு சொத்து சம்மந்தமாக சர்வே எண் குறிப்பிடவில்லை. இருப்பினும் வழக்கு சொத்தானது நான்கு எல்லைகளுக்குள் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளது.

14.44). **2009 6 MLJ 1103 Palaniammal vs A. Krishnan என்ற மாண்புமிகு உயர்நீதிமன்ற முன் தீர்ப்பில் "சர்வே உட்பிரிவில் குறிப்பிடப்படாதது மட்டும் காரணமாக வழக்கு தள்ளுபடி செய்ய முடியாது. நான்கு எல்லைகள் சரியாக இருந்தால், அது போதுமான அடையாளமாக கருதப்படும் என்ற முன்தீர்ப்பில் தீர்வு காணப்பட்டுள்ளது.** எனவே, மேற்படி வழக்கில் சர்வே எண் உட்பிரிவு குறிப்பிடவில்லை என்பது ஏற்புடையதல்ல.

14.45). பிரதிவாதி தரப்பில் தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறை, 1970 மற்றும் 1985 ஆகிய ஆண்டுகளில் 'பட்டா பாஸ்' (Patta Pass) ஆவணங்களை வழங்கியுள்ளது. அந்தந்த நில உரிமையாளர்களின் நில உடைமையை நிரூபிக்க இந்த ஆவணங்களே போதுமான சான்றுகளாகும். இருப்பினும், வாதி தரப்பினர் அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற வாதம் முன்வைக்கப்பட்டது. **Patta passbook is not a document of title. It is only an evidence of possession என்று பல்வேறு மாண்புமிகு உயர்நீதிமன்ற முன்தீர்ப்பில் தீர்வு காணப்பட்டுள்ளது.**

14.46). **2019 ( 4) CTC 57 R. ரங்கநாதன் எதிர் R. பாலசுப்பிரமணியன் என்ற மாண்புமிகு உச்ச நீதிமன்ற முன் தீர்ப்பு வழக்கில்** ***"A person cannot convey a better***

***title than he himself as" "When the vendor has no title, the purchaser acquires no title" என தீர்வு கண்டுள்ளது.*** எனவே இந்த வழக்கில் ஜெயபிரகாஷ் மற்றும் ரத்தினம் ஆகியவர்களுக்கு ஏ.2.71 ¼ சென்ட் பாத்தியப்பட்ட நிலையில் அவர்களுக்கு பாத்தியம் இல்லாத கூடுதலாக 0.63 சென்ட் குறித்து கிரைய பத்திரம் ஏற்பட்டுள்ளது நிலைக்கத்தக்கதல்ல.

***14.47). 2018 (2) MWN (Civil) 677, 2022 (2) MWN (Civil) 38, 2018 (5) CTC 883, 2018 (1) CTC 554 என்ற மாண்புமிகு உயர் நீதிமன்ற முன்தீர்ப்புகளில் Patta is not a document of title, Revenue entries are only for fiscal purposes and do not confer ownership என்று தீர்வு காணப்பட்டுள்ளது.***

14.48). மேற்கண்ட பரிசீலனைகளில் இருந்து 1ம் அயிட்ட சொத்துக்கு வாதிகளே முழுமையான உரிமையாளர்கள் என்று விளம்புகை பரிகாரம் மற்றும் வழக்கு 1ம் அயிட்ட சொத்தின் உடைமையை வாதிகளிடம் ஒப்படைக்குமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிட கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது. பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, அதிகார முகவர்களோ, உறவினர்களோ, குடும்ப உறுப்பினர்களோ மற்றும் அவர்கள் சார்பாகச் செயல்படும் வேறு எந்த நபர்களோ வழக்கு 1ம் அயிட்ட சொத்தின் பௌதீகத் அமைப்பை எந்த வகையிலும் மாற்றக்கூடாது என்று கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று எழுவினா 1 முதல் 3 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**15). எழுவினா 4 மற்றும் 5 க்கான தீர்வு:-**

| | |
|---|---|
| **எழுவினா - 4** | Whether the plaintiffs are entitled to absolute owner of the Item 2 of the suit property? |
| **எழுவினா - 5** | Whether the plaintiffs are entitled to get Permanent Injunction with respect of Item 2 of the suit property? |

15.1). வழக்கு 2ம் அயிட்ட சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டதா? என்பதையும், அது வாதிகளின் சட்டப்படியான அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் உள்ளதா? என்பதை பரிசீலிக்க வேண்டும். வழக்கு 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்கள் வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் மூலமாக பாத்தியப்பட்டது என்பது மேற்கண்டவாறு நிரூபிக்கப்பட்டுள்ளது.

15.2). வா.சா.ஆ-6 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், பட்டா எண்.536-ஐ பரிசீலனை செய்கையில் அது 1ம் வாதி தெய்வசிகாமணி பெயரில் உள்ளது என்பதும், புல எண்.194/6 (2 ம் அயிட்ட சொத்து), 194/8 (2 ம் அயிட்ட சொத்து), 219/2B, 219/5F, 223/1D சொத்து குறித்து 1ம் வாதி பெயரில் சிட்டா ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேலும் பட்டா எண்.1249-ஐ பரிசீலனை செய்கையில், அது 1ம் வாதி தெய்வசிகாமணி பெயரிலும் அவரது சகோதரர் பழனிசாமி இறப்புக்கு பின்னிட்டு அவரது மகனான 2ம் வாதி சுப்பிரமணியம் பெயரில் ஏற்பட்டுள்ளது என்பதும், அதில் புல எண்.194/5 (2 ம் அயிட்ட சொத்து), 194/7 (2 ம் அயிட்ட சொத்து), 219/2 C, 219/2D, 219/5D, 223/1C சொத்து குறித்து ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

15.3). வா.சா.ஆ.7 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், க.ச.எண்.194/6 (2 ம் அயிட்ட சொத்து), 219/2B, 194/8 (2 ம் அயிட்ட சொத்து), 219/5F, 223/1D சொத்து குறித்து 1ம் வாதி பெயரில் 1417 பசலி ஆண்டுக்குரிய அடங்கல் பதிவேடு ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.8 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் பழனிசாமி பெயரில் க.ச.எண்.194/5 (2 ம் அயிட்ட சொத்து), 194/7 (2 ம் அயிட்ட சொத்து), 219/2C, 219/5D, 223/1C சொத்து குறித்து பசலி 1417 ம் ஆண்டுக்குரிய அடங்கல் பதிவேடு ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

15.4). சர்வே எண்.194 ல் கண்ட 2ம் அயிட்ட சொத்து அரசூர் கிராம புல எண்.194-ல் பு.ஏ.4.42 ½-ல் பு.ஏ.3.78 சொத்தில் வாதிகளின் சுவாதீனம் வா.சா.ஆ.1, 6 முதல் 8 ஆவணங்களின் மூலமாக வழக்கு 2ம் அயிட்ட சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதும், வழக்கு 2ம் அயிட்ட சொத்து வாதிகளின் சட்டப்படியான அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் உள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. வழக்கு 2ம் அயிட்ட சொத்துக்கு வாதிகளே முழுமையான உரிமையாளர்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. வழக்கு 2ம் அயிட்ட சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது. எனவே பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, பணியாளர்களோ, முகவர்களோ, நியமிக்கப்பட்டவர்களோ, ஊழியர்களோ, தொழிலாளர்களோ, உறவினர்களோ, குடும்ப உறுப்பினர்களோ மற்றும் அவர்கள் சார்பாகச் செயல்படும் வேறு எந்த நபர்களோ வழக்கு 2ம் அயிட்ட சொத்தில் வாதியின் அமைதியான உடைமை மற்றும் அனுபவத்திற்கு எந்த வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என்று கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று எழுவினா 4 மற்றும் 5-க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>16). எழுவினா 6 மற்றும் 7-க்கான தீர்வு :-</u>**

| | |
|---|---|
| **எழுவினா - 6** | Whether the plaintiffs are entitled to declaration to use and enjoy the cart track in Item 3 of the suit property? |
| **எழுவினா - 7** | Whether the plaintiffs are entitled to get Mandatory Injunction to remove the obstructions in the Item 3 of the suit property? |

16.1). வழக்கு 3ம் அயிட்ட சொத்தில் உள்ள வண்டிப்பாதையை உபயோகத்தில் வைத்து அனுபவிப்பதற்கு வாதிகளுக்கு உரிமை உள்ளதா? என்பதையும், வழக்கு 3ம் அயிட்ட சொத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு வாதிகள் கோரிய செயலுறுத்துக் கட்டை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா? என்பதையும் பரிசீலிக்க வேண்டும்.

16.2). வண்டித்தடம் க.ச.எண்.194, 195 மற்றும் 197 உரிமையாளர்கள் தொடர்ந்து உபயோகப்படுத்தி வந்தனர் என்றும், பிரதிவாதிகள் அந்தப்பகுதியில் க.ச.194, 195 மற்றும் 197-ல் உள்ள விவசாயிகளிடம் உள்ள பூமியை கிரையம் பெற்றவுடன் குறிப்பாக கடந்த 07.07.2005-ல் 9 தனிப்பட்ட குடும்பங்களிலும் இருந்து சொத்துக்களை கிரையம் பெற்றவுடன் வேண்டுமென்றே அந்த வண்டித்தடத்தை அழித்துவிட்டனர் என சொல்லப்பட்டுள்ளது. தற்போதும் ஆவணங்கள் மேற்படி வண்டித்தடம் க.ச.நம்பர்.194/9 என்ற உட்பிரிவின் கீழ் பு.ஏ.0.59 என்ற விஸ்தீரணத்தில் கூட்டுவண்டிப்பாதை என்று தனியாக உட்பிரிவாகியுள்ளது. அதுவும் வாதிகள் பெயரிலும், பிரதிவாதிகள் பெயரிலும், மற்றவர்கள் பெயரிலும் கூட்டு வண்டித்தடம் என்று உட்பிரிவாகியுள்ளது.

16.3). வா.சா.ஆ.1 வாதிகள் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை பரிசீலனை செய்கையில், வாதிகள் சர்வே எண்.194-ல் கண்ட ஏ.4.42 ½ சென்ட்டை கிரையம் பெற்றுள்ளார்கள் என்பதும், அதில் தென்வடல் பொது வண்டித்தடத்துக்கும் மேற்கு என நான்கெல்லை குறிப்பிட்டு இதில் உள்ள மாவடை, மரவடை, மாமூல் வழித்தடம் வகையறா சகிதம் என குறிப்பிட்டு கிரையப் பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது நிரூபணமாகிறது. மேற்படி கிரைய ஆவணத்தை பரிசீலனை செய்கையில், வாதி சொத்துக்கு கிழபுறமாக உள்ள வண்டித்தடம் பொது வண்டித்தடம் என்பதும், மேற்படி சர்வே எண்ணில் கண்ட மாமூல் தடம் சம்மந்தமாக வாதிக்கு உரிமை உள்ளது என்பதையும் அறிய முடிகிறது. வா.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் புல எண்.194/9 (3ம் அயிட்ட சொத்து) குறித்து முத்துசாமி, 1ம் வாதி தெய்வசிகாமணி, கே.பி.சி.கந்தசாமி, கே.பி.ஆர். டெவலப்பர்ஸ் லிமிடெட் பெயரில் பட்டா எண். 1146 ஏற்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது.

16.4). பி.சா.ஆ.5, 21.02.2006 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலமாக, க.ச.194/9 நெம்பர் காலையில் தென்வடல் கிழமேல் தடம் இதில் பொதுவில் 1/5

பங்கையும் பி.சா.ஆ.3 07.07.2005 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலமாக, க.ச.எண்.194/9 நம்பர் காலையில் தென்வடல் கிழமேல் தடத்தையும், இதில் பொதுவில் 4/5 பங்கு சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்பதை அறிய முடிகிறது. சர்வே 194/9-ல் கண்ட பாதையானது கூட்டு மற்றும் பொது வண்டித்தடமாகும். சர்வே 194/9-ல் கண்ட பாதையை உபயோகிக்க வாதிகளுக்கும் உரிமையுள்ளது. எனவே, வாதிகளுக்கு உள்ள உரிமையை மறுத்து ஏற்படுத்திக் கொண்ட கிரைய ஆவணங்கள் வாதிகளைக் கட்டுப்படுத்தாது.

16.5). வா.சா.ஆ.6 பட்டாஆவணத்தை பரிசீலனை செய்கையில் புல எண்.194/9 குறித்து முத்துசாமி, 1ம் வாதி தெய்வசிகாமணி, கே.பி.சி கந்தசாமி, கே.பி.ஆர்.டெவலப்பர்ஸ் லிமிடெட் பெயரில் கூட்டு பட்டா ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேற்படி பழைய புல எண்.194/9 என்பது வழக்கில் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட வண்டித்தடமாக காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.23 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் சர்வே எண்.194/9 (3ம் அயிட்ட சொத்து) கூட்டு வண்டி பாதை என்பதும், அதன் உரிமையாளர்களாக கே. பி. ஆர் டெவலப்பர்ஸ் லிமிடெட், கே. பி. சி கந்தசாமி, 1ம் வாதி தெய்வசிகாமணி மற்றும் முத்துசாமி பெயரில் பட்டா எண்.1146 ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

16.6). வண்டித்தடமானது வாதிகள் கிரையம் பெற்றுள்ள பு.ஏ.4.42 ½ க்கு கிழபுறமாக அமைந்துள்ளது. அதை வாதிகள் கடந்த 06.04.2007 வரை தொடர்ந்து தங்களுடைய பூமிக்கு வண்டி வாகனாதி வகையறாக்களை கொள்ளுப்பாளையம் வரை ஓட்டிச்சென்று உபயோகப்படுத்தி வந்தனர். கடந்த 06.04.2007-ல் பிரதிவாதிகள் வேண்டுமென்றே வாதிகள் வண்டித் தடத்தை உபயோகிக்காத வண்ணம் பூமியின் கிழபுறமாக தென்வடலாக கம்பிவேலி அமைத்து, அடைத்து, வண்டித்தடத்தை ஆக்கிரமித்து அவர்களது பூமிக்குள் சேர்த்து விவசாய பூமியாக மாற்றியுள்ளனர். அதை பி.சா.1 குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளார்.

16.7). பி.சா.3 குறுக்கு விசாரணையில் இருந்து புல எண்.194/9 என்பது கூட்டு வண்டிப்பாதை என்பதும், அதில் 1ம் வாதி மற்றும் 2ம் வாதியின் தகப்பனார் பெயரும், இதர நபர்கள் பெயரும் கூட்டாக உள்ளது என்பதும், அது நிகழ் நிலையில் வண்டிப்பாதையாக இல்லை என்பதும், பிரதிவாதிகள் அவர்கள் நிலத்துடன் சேர்த்து வண்டிப்பாதையில் சேர்த்து வேலி அமைத்துள்ளார் என்பதும் நிரூபணமாகிறது. பி.சா.3 குறுக்கு விசாரணையில் "கூட்டு வண்டிப்பாதை கொள்ளுபாளையத்தில் தொடங்கி தென்வடலாக தாவா சொத்திற்கு பின்புறம் உள்ள க.ச.206 ல் குட்டையை தாண்டி ரோட்டிற்கு வருகிறது என்றால் கொள்ளுபாளையத்திலிருந்து தென்வடலாக க.ச.எண்.206 வரை பாதை உள்ளது. க.ச.எண். 206 வழியாக பாதை இல்லை. மேற்படி சாட்சியத்தில் இருந்து கொள்ளுபாளையத்திலிருந்து தென்வடலாக க.ச.எண்.206 வரை பாதை உள்ளது என்பதை அறியமுடிகிறது.

16.8). பி.சா.1 குறுக்கு விசாரணையில், 1, 2ம் அயிட்ட சொத்திற்கு மேல்புறம், வடபுறம், கிழபுறம் மூன்று பகுதிகளிலும் எங்களுடைய சொத்து உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தென்புறமாக மந்தை உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழபுறத்தில் தென்வடலாகவும், மேல்புறத்தில் தென்வடலாகவும், வடபுறத்தில் கிழமேலாகவும் கம்பிவேலி அமைத்துள்ளோம் என்றால் நாங்கள் கிரயம் வாங்கிய உடன் வேலி அமைத்தோம் என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்திலிருந்து, 1, 2ம் அயிட்ட சொத்திற்கு மேல்புறம், வடபுறம், கிழபுறம் மூன்று பகுதிகளிலும் பிரதிவாதிகளுடைய சொத்து உள்ளது என்பதும், தாவா சொத்திற்கு கிழபுறத்தில் தென்வடலாகவும், மேல்புறத்தில் தென்வடலாகவும், வடபுறத்தில் கிழமேலாகவும் பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய உடன் வேலி அமைத்தனர் என்பதும், நிரூபணமாகிறது.

16.9). நீ.ம.சா.ஆ.4 முதல் 6 அறிக்கை மற்றும் வரைபடத்தில் பிரதிவாதிகளின் சொத்து அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகளின் ஆவணங்களின் படி சொத்து அளக்கப்பட்டுள்ளது. அதில் சர்வே எண்.194/9 நெ காலையில் தடம் இருந்ததற்கான அமைப்பு காணப்படவில்லை. மேற்படி காலையில் வண்டித்தடம் எதுவும் காணப்படவில்லை. சர்வே எண்.194/9 நெ காலை மட்டும் வாதியின் ஆக்கிரமிப்பில் உள்ளது என அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டு காட்டியுள்ளார்.

16.10). வா.சா.ஆ.1 மூலம் 3 ம் அயிட்ட சொத்தான சர்வே எண்.194/9 யை அனுபவிக்க வாதிகளுக்கு உரிமை உள்ளது என்பதும், வாதிகளுக்கு சர்வே எண்.194/9 குறித்து கூட்டு பட்டா ஏற்பட்டுள்ளது என்பதும் அறியமுடிகிறது. மேற்படி வண்டிப்பாதையானது தற்போது இல்லை என்பதும், மேற்படி வண்டிப்பாதையை பிரதிவாதி அவரது நிலத்துடன் சேர்த்து வேலி அமைத்துள்ளார் என்பது நீ.மா.சாஆ.4 முதல் 6 ஆவணங்கள் மூலமாக நிரூபணமாகிறது. கொள்ளுபாளையத்திலிருந்து தென்வடலாக க.ச.எண்.206 வரை உள்ள பாதை குறித்து நீ.ம.சா.ஆ.4 முதல் 6 அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்பதும், சர்வே எண்.194/9 ல் பிரதிவாதி விவசாயம் செய்து அவரது நிலத்துடன் சேர்த்து வேலி அமைத்து ஆக்கிரமிப்பு செய்து ள்ளார் என்பதும் நிரூபணமாகிறது.

16.11). எனவே 3 ம் அயிட்ட சொத்து குறித்து வழக்கு 3 ம் அயிட்ட சொத்தில் விவரிக்கப்பட்டுள்ள வழக்கு வண்டிப் பாதையைப் பயன்படுத்தவும் அனுபவிக்கவும் வாதிகளுக்கு உரிமை உண்டு என்று கோரிய விளம்புகை பரிகாரம் மற்றும் வழக்கு 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்கு செல்வதற்கு அடைய உள்ள ஒரே வழியான அயிட்டம் 3 தாவாச் சொத்துக்களில் பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ள ஆக்ரமிப்புகளை உடனே அகற்ற வேண்டும் என்று கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று எழுவினா 6 மற்றும் 7-க்கு இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**17). கூடுதல் எழுவினா 1:-**

| | |
|---|---|
| **கூடுதல் எழுவினா - 1** | Whether the suit is barred by Limitation? |

17.1). அசல் வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்கையில் வாதிகள் தரப்பில் பிரதிவாதியும் அவரது ஆட்களும் தாவா சொத்தில் நுழைந்து கிழபுறம் உள்ள தென்வடல் கிழுவன் வேலியை சேதப்படுத்தியதாகவும், அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, 06.04.2007 தேதியில் தாவா சொத்தை பார்வையிட்டனர் என சாட்சியமளித்துள்ளார். அசல் வழக்கு 2010 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3 வருடங்களுக்குள்ளாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே கூடுதல் எழுவினா 1 அசல் வழக்கு காலதாமதத்தால் பாதிக்கப்படவில்லை என தீர்வுகாணப்படுகிறது.

**18). எழுவினா 8:-**

| | |
|---|---|
| **எழுவினா - 8** | To what other relief? |

எழுவினா 1 முதல் 7 மற்றும் கூடுதல் எழுவினா 1 ஆனது மேற்கண்டவாறு தீர்வுகாணப்பட்டதால் வேறு எந்த பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 8 க்கு தீர்வு காணப்படுகிறது.

**19). முடிவாக,**

வழக்கு 1ம் அயிட்ட சொத்துக்கு வாதிகளே முழுமையான உரிமையாளர்கள் என்று விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. வழக்கு 1ம் அயிட்ட சொத்தின் உடைமையை வாதிகளிடம் ஒப்படைக்குமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, அதிகார முகவர்களோ, உறவினர்களோ, குடும்ப உறுப்பினர்களோ

மற்றும் அவர்கள் சார்பாகச் செயல்படும் வேறு எந்த நபர்களோ வழக்கு 1ம் அயிட்ட சொத்தின் பௌதீகத் அமைப்பை எந்த வகையிலும் மாற்றக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

வழக்கு 2ம் அயிட்ட சொத்துக்கு வாதிகளே முழுமையான உரிமையாளர்கள் என்று விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, பணியாளர்களோ, முகவர்களோ, நியமிக்கப்பட்டவர்களோ, ஊழியர்களோ, தொழிலாளர்களோ, உறவினர்களோ, குடும்ப உறுப்பினர்களோ மற்றும் அவர்கள் சார்பாகச் செயல்படும் வேறு எந்த நபர்களோ வழக்கு 2ம் அயிட்ட சொத்தில் வாதிகளின் அமைதியான உடைமை மற்றும் அனுபவத்திற்கு எந்த வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

வழக்கு 3ம் அயிட்ட சொத்தில் விவரிக்கப்பட்டுள்ள வழக்கு வண்டிப் பாதையைப் பயன்படுத்தவும் அனுபவிக்கவும் வாதிகளுக்கு உரிமை உண்டு என்று விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. வழக்கு 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்கு செல்வதற்கு அடைய உள்ள ஒரே வழியான அயிட்டம் 3 தாவாச் சொத்துக்களில் பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ள ஆக்ரமிப்புகளை உடனே அகற்ற வேண்டும் என்று செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும் பிரதிவாதிகள் 2 மாத காலத்திற்குள் ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் நாள் இந்த

திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**சூலூர்.**

**சாட்சிகள் மற்றும் சான்றாவணப் பட்டியல்:**

**வாதிகள் தரப்பு சாட்சிகள்:**

வா.சா.1 - தெய்வசிகாமணி

வா.சா.2 - ராமசாமி

வா.சா.3 - தண்டபாணி

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:**

| ஆவண. எண். | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 24.08.1977 | வாதி அவரது அண்ணன் பழனிசாமியுடன் சேர்ந்து வாங்கிய கிரைய சாசனம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 09.01.2009 | பழனிச்சாமி இறப்பு சான்றிதழ் | அசல் |
| வா.சா.ஆ.3 | --- | தாவா சொத்தின் பட்டா பாஸ்புத்தகம் | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| வா.சா.ஆ.4 | --- | 2ம் வாதியின் தகப்பனார் பெயரிலுள்ள பட்டா பாஸ்புத்தகம் | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| வா.சா.ஆ.5 | --- | தாவா சொத்தின் வாதிகளின் பெயரில் உள்ள பட்டா (3 எண்ணிக்கை) | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.6 | --- | தாவா சொத்தின் சிட்டா | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.7 | --- | தாவா சொத்தின் 1ம் வாதியின் அடங்கல் | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.8 | --- | தாவா சொத்தின் 2ம் வாதியின் அடங்கல் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.9 | --- | தாவா சொத்தின் வாதி பெயரில் உள்ள கிஸ்து ரசீது (14 எண்ணிக்கை) | அசல் |
| வா.சா.ஆ.10 | 06.04.2007 | காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.11 | 09.04.2007 | புகாரினை காவல் நிலையத்தில் பெற்றுக் கொண்டதற்கான ரசீது | அசல் |
| வா.சா.ஆ.12 | --- | குற்றவியல் எண்.272/2007 ல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடத்தில் 1ம் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணை குறிப்புகள் | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.13 | --- | நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடத்தில் 1ம் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட புகார் | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.14 | --- | அசல் வழக்கு எண்.760/2007 ல் 1ம் வாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பிராது | நகல் |
| வா.சா.ஆ.15 | 30.07.2014 | அசல் வழக்கு எண்.760/2007 ல் மூன்றாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புரை | நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.16 | 30.07.2014 | அசல் வழக்கு எண்.760/2007 ல் மூன்றாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட | நீதிமன்ற சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.17 | 07.07.2005 | பிரதிவாதிகளின் பெயரில் உள்ள கிரைய பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.18 | 22.03.2004 | உயில் சாசனம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.19 | 10.07.1975 | செட்டில்மென்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.20 | 29.03.1976 | செட்டில்மென்ட் ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.21 | 29.04.1956 | கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.22 | 21.08.1960 | பாகசாசன ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.23 | | க.ச.எண்.194/9 க்குரிய சிட்டா | பதிவிறக்க நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>:**

பி.சா.1 - பாலசுப்பிரமணியம் (1ம் பிரதிவாதி நிறுவனத்தின் டாக்குமெண்ட் ஆபீஸர்)

பி.சா.2 - நிமலன் கிறிஸ்டோபர் ( சூலூர் தாலுக்கா சர்வேயர்)

பி.சா.3 - சுரேஷ்பாபு (அரசூர் கிராம நிர்வாக அலுவலர்)

பி.சா.4 - சித்ரா (வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையர்)

பி.சா.5 - சதிஷ்குமார் (சூலூர் தாலுக்கா வட்ட சார் ஆய்வாளர்)

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>:**

| ஆவண. எண். | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| பி.சா.ஆ.1 | --- | பி.சா.1 பாலசுப்பிரமணியத்திற்கு சாட்சியம் அளிக்க அனுமதி கொடுத்த கடிதம் | அசல் |
| பி.சா.ஆ.2 | --- | பி.சா.1ன் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பீடு |

| | | | |
|---|---|---|---|
| | | | செய்யப்பட்டது |
| பி.சா.ஆ.3 | 07.07.2005 | நடராஜன் வகையறா 1ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.4 | 19.01.2006 | 1ம் பிரதிவாதி 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.5 | 21.02.2006 | முத்துசாமி வகையறா 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.6 | 26.07.2008 | பல்லடம் தாசில்தார் கொடுத்த சான்றிதழ் | அசல் |
| பி.சா.ஆ.7 | 05.01.2001 | சூலூர் வட்டாட்சியர் கொடுத்த தாவா சொத்திற்கான 10(1) பட்டா | சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.8 | 05.01.2011 | தாவா சொத்திற்கு சூலூர் வட்டாட்சியர் கொடுத்த அடங்கல் அ-பதிவேடு | சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.9 | 29.04.1956 | கிரையப் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.10 | 31.08.1966 | கிரையப் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.11 | 10.07.1975 | செட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.12 | 04.03.2024 | அரசூர் கிராம UDR பதிவேடு | உண்மை நகல் |
| பி.சா.ஆ.13 | --- | UDR பதிவேடு | உண்மை நகல் |
| பி.சா.ஆ.14 | --- | அரசூர் கிராம புல எண்.194 க்கான | உண்மை நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | புலப்படம் | |
| பி.சா.ஆ.15 | --- | புல எண்.194/9 க்கான பட்டா எண்.1146 க்கான சிட்டா | பதிவிறக்க நகல் |
| பி.சா.ஆ.16 | --- | புல எண்.194/9 க்கான அடங்கல் பதிவேடு | உண்மை நகல் |
| பி.சா.ஆ.17 | --- | அரசூர் கிராமத்திற்கான கை-சிட்டா | உண்மை நகல் |

**சாட்சிய சான்றாவணங்கள் :**

| **ஆவண. எண்.** | **தேதி** | **ஆவணம்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| சா.சா.ஆ.1 | --- | பி.சா.2 ராமசாமியின் வாக்காளர் அடையாள அட்டை | நகல் |
| சா.சா.ஆ.2 | 29.08.2024 | புல எண்.194-ன் புலவரைபடம் | உண்மை நகல் |
| சா.சா.ஆ.3 | | புல எண்.194 -ன் ஆர்.எஸ்.ஆர் | உண்மை நகல் |
| சா.சா.ஆ.4 | --- | புல எண்.194 -ன் அ-பதிவேடு | பதிவிறக்க நகல் |
| சா.சா.ஆ.5 | 29.08.2024 | பட்டா மாறுதல் உத்தரவு | பதிவிறக்க நகல் |
| சா.சா.ஆ.6 | 30.06.2020 | பட்டா உட்பிரிவு செய்யப் பட்டதற்கான உத்தரவு | பதிவிறக்க நகல் |

**நீதிமன்ற ஆவணங்கள் :-**

| **ஆவண. எண்.** | **தேதி** | **ஆவணம்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | --- | நீதிமன்ற ஆணையர் அறிக்கை | அசல் |

| | | | |
|---|---|---|---|
| நீ.ம.சா.ஆ.2 | --- | நீதிமன்ற ஆணையர் வரைபடம் | அசல் |
| நீ.ம.சா.ஆ.3 | --- | சர்வேயர் வரைபடம் | அசல் |
| நீ.ம.சா.ஆ.4 | --- | நீதிமன்ற ஆணையர் அறிக்கை | அசல் |
| நீ.ம.சா.ஆ.5 | --- | நீதிமன்ற ஆணையர் வரைபடம் | அசல் |
| நீ.ம.சா.ஆ.6 | --- | சர்வேயர் வரைபடம் | அசல் |

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

சூலூர்

அசல் வழக்கு எண். 937/2017

வரைவு/செவ்வை தீர்ப்புரை

நாள்: 18.03.2026